Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 23 ஆம் நாள் (09.10.2002) புதன்கிழமை இதழ் : 09

சொலெக்ஸ்
மூக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கவும்
செயற்கை மாபிள் கண்களுக்கும்
மற்றும் பல் கட்டுதல், மிதப்புப் பற்களுக்கு
கிளிப்ஸ் செய்து கொடுத்தல்.
லக்ஷறி பல் கட்டுமிடம்
(சி/036)
232/A, [illegible]ண்டி வீதி, சாவகச்சேரி.

### அரசியல் கைதிகளுக்கு ஆதரவான

## வவுனியா மறியல் போராட்டத்தில் மக்களுடன் பொலிஸார் மோதல்!

(வவுனியா நிருபர்)

களுத்துறை, வெலிக்கடை, மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரியும் வவுனியாவில் நேற்று மறியல் போராட்டமும் ஆர்ப்பாட்டப் பேரணியும் இடம்பெற்றன.

வவுனியாவில் நான்கு முனைகளில் காலை 10 மணியளவில் மறியல் போராட்டம் ஆரம்பமாகியது. மன்னார் வீதியில் குருமண்காட்டுச் சந்தியிலும், யாழ்.வீதியில் பிறவுண் கொம்பனி முன்பாகவும், ஹொரவப் பொத்தானை வீதியில் இறம்பைக்குளத்திலும், கண்டி வீதியில் மகாவித்தியாலயம் அருகிலும் மறியல் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இதனால் வீதிப் போக்குவரத்துக்கள் அனைத்தும் தடைப்பட்டன. இரண்டு மணிநேரமாக மறியல் போராட்டம் நடத்தப்பட்டபோது கண்டி வீதியில் மகாவித்தியாலயம் முன்பாக பொலிஸாருடன் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதன் போது நான்கு (10ஆம் பக்கம் பார்க்க)

## அரசியற்கைதிகளுக்கு ஆதரவாக குடாநாட்டில் வெகுஜனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

களுத்துறையில் தமிழ் அரசியற்கைதிகள் தொடரும் உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து இன்று குடாநாட்டில் பல இடங்களிலும் பொது அமைப்புக்களால் வெகுஜனப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தமிழ் அரசியற் கைதிகளின் போராட்டத்திற்கு வெகுஜன ஆதரவைக் காட்டுமுகமாக இந்த போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக - யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் - தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று சகல பாடசாலைகள், பயிற்சிக் கலாசாலைகள் என்பவற்றில் பிரார்த்தனையின் பின் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி மாணவர்கள் மத்தியில் உரையாற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. மதியம் 12மணி முதல் ஒருமணிவரை சகல பணி நிறுவனங்களிலிருந்தும் ஊழியர்கள் வெளியேறி, வெளியே நின்று அமைதிப்போராட்டத்தில் ஈடுபடுமாறும், அதே நேரம் சகல மனிதநேய அமைப்புக்களிலிருந்தும் முக்கிய பிரதிநிதிகள் சுண்டிக்குளியில் உள்ள யாழ்.மனித உரிமை ஆணைக்குழு (10ஆம் பக்கம் பார்க்க)

# புனரமைப்பில் நெருங்கிச் செயற்பட ஜப்பான்-புலிகள் பேச்சில் இணக்கம்!

## தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் சந்திப்பு

(கிளிநொச்சி நிருபர்)

**வடக்கு - கிழக்கைப் புனரமைக்கும் பாரிய பணிகளில் நெருங்கிச் செயற்படவும், தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கவும் தயாராகவுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த ஜப்பானிய உயர்மட்டக்குழு தெரிவித்தது.**

ஜப்பானிய அரச தூதுக்குழுவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் குழுவுக்கும் இடையில் வன்னியில் நேற்றுக்காலை ஒருமணிநேரப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஜப்பானியத் தூதுக்குழுவுக்கு ஜப்பானிய அரசின் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகத் தலைவர் ரி.ரகுச்சி தலைமை தாங்கினார். விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார்.

சமாதானப் பேச்சுக்களால் ஏற்பட்டுள்ள நல்ல சாதகமான சூழ்நிலை பற்றி மகிழ்ச்சி தெரிவித்த ஜப்பான் தூதுக்குழுவினர், அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் ஜப்பான் நாட்டின் நல்லெண்ண அம்சங்களை வெளியிட்டனர்.

அத்துடன் சமாதான அரசியல் (10ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்துப் பேச்சுக்கள் ரணில்-சந்திரிகா ஆராய்வர்

(கொழும்பு நிருபர்)

அடுத்த கட்ட தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நாளை மறுநாள் பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் லக்ஷ்மன் கதிர்காமரும் உடனிருப்பார் எனத் தெரியவருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத் தரப்புக் குழுவில் அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, திலக் மாரப்பன ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்

சமாதான பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாக ஜனாதிபதிக் (10ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள், சட்டமா அதிபர், கூட்டமைப்புடன் கைதிகள் குறித்துப் பிரதமர் இன்று ஆராய்வு!

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் பிரதமர் தலைமையில் இன்று ஆராயப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான மேற்படி சந்திப்பில் அமைச்சர்களான மிலிந்த மொறகொட, தி. மகேஸ்வரன் ஆகியோரும் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டமா அதிபர் கமல சபேசன் ஆகியோரும் இத்திணைக்களத்தின் உயரதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். இச்சந்திப்பில் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் குறித்த சட்டப்பிரச்சினைகள் பற்றிய விடயம் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இச்சந்திப்பைத் தொடர்ந்து சாதகமான இணக்கமொன்று ஏற்படும் பட்சத்தில் அனைத்துத்தரப்பினரும் இணைந்து இன்று மாலை களுத்துறைச்சிறைச்சாலைக்குச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளைச் சந்தித்துப் பேசுவார்களென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குழுவினருடன் மன்னார் ஆயர் வண.இராயப்பு ஜோசப் ஆண்டகையும் செல்வாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

## இரவில் வீடுபுகுந்த ராணுவ சார்ஜன்ட்; பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்!

(உசன்)

விடத்தல்பளைப் பகுதியில் கடந்த சில நாட்களாக இரவு வேளைகளில் மக்களுக்குத் தொல்லைகள் கொடுத்துவந்த இராணுவ சார்ஜன்ட் ஒருவர் நேற்றுமுன்தினம் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இது பற்றித் தெரியவருவதாவது, நேற்றுமுன்தினமிரவு 11மணியளவில் விடத்தல்பளை கமலாசினி பாடசாலைக்கு அருகில் உள்ள வீடொன்றினுள் புகுந்த இந்த இராணுவ சார்ஜன்ட் பெண்கள் உறங்கிக்கொண்டிருந்த அறைக்குள் புகுந்துள்ளார். இவரைக் கண்ட பெண்கள் கூக்குரலிடவே இப்படைவீரர் அங்கிருந்து ஓட எத்தனித்துள்ளார். எனினும் அயலவர்களால் இவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவ்வேளையில், தாம் இராணுவ சார்ஜன்ட் என அவர் தன்னை அடையாளம் காட்டினார். எனினும் மக்கள் இவரை விடுவிக்க மறுத்து, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் அறிவிக்கப் போவதாகக் கூறினர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பெண்கள் எழுச்சிநாள் நாளை கிளிநொச்சியில்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வுகள் நாளை கிளிநொச்சி நகரில் மிகவும் எழுச்சிபூர்வமாக நடைபெறவுள்ளது.

முதல் பெண் போராளியான இரண்டாம் லெப்.மாலதியின் நினைவு நாளான நாளையதினம் மேற்படி எழுச்சிநாள் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

வழமையைவிட இந்த ஆண்டு தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள் மிகவும் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நாளைய நிகழ்வுகளில் மகளிர் படையணியின் அணிவகுப்பு, போர் ஒத்திகை, மாதிரித் தாக்குதல் நிகழ்வுகள் என்பவை நடைபெறவுள்ளன. (க)

### விண்ணாணம் விநாசியர்



விடத்தல்பளை மாதிரியான வேலையளுக்கு செமச் சாத்துத்தான் சரி!

## பாணுக்குள் இருந்த தகரத்துண்டு பெண்ணின் தொண்டைக்குள் சிக்கியது

### சுதுமலைப் பகுதியில் சம்பவம்

(மருதனார்மடம்)

பாணுக்குள் இருந்த தகரத்துண்டொன்று அதனை உண்ட பெண்ணின் தொண்டைக்குள் சிக்கிக்கொண்ட சம்பவம் சுதுமலையில் நிகழ்ந்துள்ளது.

காலை உணவாக பாண் உட்கொண்டபோது தொண்டைக்குள் ஏதோ சிக்கி வலி ஏற்படவே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவர் சென்றார். அங்கு சில மாத்திரைகளை மட்டுமே கொடுத்து அனுப்பினரென்றும் வீட்டிற்கு வந்தும் வலி அதிகமாகவே காணப்பட, மானிப்பாயில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்திய பொழுது தொண்டைக்குள் இருந்து சிறிய தகரத்துண்டொன்று மீட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (89)

# வன்னியிலிருந்து திரும்பியோருக்கு 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வன்னியிலிருந்து திரும்பிய குடும்பங்களுக்கு வழங்கப்பட இருந்த இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதற்குப்பதிலாக பதினையாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் வந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உடனடியாக பதினையாயிரம் ரூபா வழங்கப்படுவது தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்க அதிபர் இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

கடந்தமாத இறுதியில் மேற்படி குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டு அதற்கான வேலைகளும் நடைபெற்றன.

இவ்வேலைகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக புதிய அரச அதிபர் பதவியேற்றதைத் தொடர்ந்து இத்தொகையை 15000 ரூபாவாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்கொடுப்பனவை வழங்குவதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் புதிய அரசஅதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

(க)

# கைதிகள் விடுதலைக்கு மன்னாரிலும் பேரணி!

(மன்னார்)

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி மன்னாரில் மாபெரும் எழுச்சிப் பேரணியொன்று நடைபெற்றுள்ளது.

மன்னார் பொது விளையாட்டு அரங்கிலிருந்து நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஆரம்பமான இப்பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மேற்படி எழுச்சிப்பேரணியில் கலந்துகொண்டனர்.

பதாகைகள், சுலோக அட்டைகள் போன்றவற்றைத் தாங்கிய வண்ணம் இவ்வெழுச்சி ஊர்வலம் நகர்ந்தது. இறுதியாக மன்னார் அரச அதிபர் அலுவலகத்தைச் சென்றடைந்தது. அங்கு மன்னார் மாவட்ட குருமுதல்வர் அவர்களால் அரசஅதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## ஜி.ரி.சட். குழுவினர் யாழ்.வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன அதிகாரிகள் குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்கிறது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு வேலைகள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இக்குழுவினர் இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளனர். இன்று மாலை இக்குழுவினர் யாழ்.அரச அதிபருடன் மேற்படி விடயம் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர். (க)

## எச்சரிக்கைப் பலகைகள்

(மீசாலை)

தென்மராட்சியில் மிதிவெடிகள் கணப்படலாம் என இனங்காணப்பட்டுள்ள இடங்களில் மிதிவெடி எச்சரிக்கைப் பலகைகள் நாட்டப்பட்டு வருகின்றன. சாவகச்சேரி நகரப் பகுதி, சங்கத்தானை, பெரியமாவடி, அரசடி, பெருங்குளம் சந்தி மற்றும் கண்டி வீதியின் சில இடங்களில் மிதிவெடி எச்சரிக்கைப் பலகைகள் நிறுவப்பட்டு வருகின்றன. பெரியளவில் மக்களின் கண்களுக்கு தெளிவாகத் தெரியக்கூடியதாக, மக்களின் கவனத்தை ஈர்க்கக்கூடியதாக இப்பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## கண்டெடுத்த அ.அட்டை

கோப்பாயைச் சேர்ந்த சின்னத்துரை கணேசலிங்கம், மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சுஜிதா குணபாலசிங்கம் ஆகியோரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## பரிசளிப்பும் நவராத்திரி விழாவும்

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவைச் சைவச் சிறுவர் இல்ல பரிசளிப்பு விழாவும், நவராத்திரி விழாவும் நாளை வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஏழாலை சைவச் சிறுவர் இல்லத்தில் அருட்கவி.சீ. விநாசித்தம்பி அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் இசையரங்கு நிகழ்ச்சியும், திருமதி ஜெயந்தி - சுகிர்தன் அவர்களின் மாணவர்கள் வழங்கும் நாட்டிய அரங்கு நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

## விபத்தில் மரணம்

(வண்ணை)

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி காயமடைந்திருந்து யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் அங்கு மரணமானார்.

சாவகச்சேரியில் இருந்து இடம் பெயர்ந்து மானிப்பாயில் வசித்து வந்த நாகமுத்து வீரசிங்கம் (வயது-55) என்பவரே மரணமானவா ஆவார். இவ்விபத்து சம்பந்தமாக சாவகச்சேரி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (111)


# முகாமை நோக்கு
(Management Focus)

## சஞ்சிகை வெளியீடு

இதழ் - 07

இடம்:-முகாமைத்துவ மண்டபம் (MH3)
நாள் :- இன்று (09-10-2002) புதன்கிழமை
நேரம்:- மாலை 2.30 மணி

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-045)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 15 - 04 - 1931



விண்ணில் 10 - 09 - 2002

### அமரர் அன்னம்மா வைத்திலிங்கம்

10.09.2002 அன்று 'சுவிஸ்' நாட்டில் அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவி அன்னம்மா வைத்திலிங்கம் அவர்கள் விபத்தினால் பாதிப்புற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை பல் வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு ஓடிவந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும்,இன்னும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயங் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நாளை 10.10.2002 வியாழக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து நண்பகல் இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஜெ.இராணி, பெ.சசி } பிள்ளைகள்
சு.சின்னமணி, சு.செல்லத்துரை } சகோதரர்கள்
சி.முத்தாச்சி, வி.பொன்னம்மா, காலம்சென்ற ம.தங்கம்மா } சகோதரிகள்

'சுகிர்த கலா பவனம்'
போக்காலை வீதி,
உடுப்பிட்டி.

(சி-044)

# விளையாட்டு

## ஆசிய விளையாட்டுப் போட்டி:

# 100 மீற்றர் ஓட்டத்தில் சுசந்திகாவுக்கு தங்கம்!



தென்கொரியாவில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை நேற்றுத் தனது முதலாவது தங்கப்பதக்கத்தைப் பெற்றது.

பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் சுசந்திகா ஜெயசிங்க 11.15 செக்கனில் ஓடிமுடித்து முதலாம் இடத்தைப் பிடித்தார். இது புதிய ஆசியப் போட்டிச் சாதனையுமாகும். முன்னதாக நடந்த தகுதிகாண் போட்டியில் சுசந்திகா இத்தூரத்தை 11.16 செக்கனில் ஓடிமுடித்திருந்தார்.


## 2ஆம் லெப்.மாலதி நினைவு நாள்
தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் 10.10.2002

2ஆம் லெப். மாலதி நினைவு நாளான, தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகள் வன்னிப் பெருநிலப்பரப்பு திறந்தவெளி அரங்கில் நடைபெறக் காத்திருக்கின்றது....

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படையணிகள் ஒருங்கிணைந்து நடாத்தும்

## மாபெரும் எழுச்சி நிகழ்வு



* மகளிர் படையணியின் இராணுவ அணிவகுப்புகள்
* மகளிர் படையணியின் போராட்ட வரலாற்றைச சித்தரிக்கும் ஊர்திகள் பவனி
* உயிர்க் கவிதையின் உயர் வேதம்... (நாடகம்)
* உண்மைச் சம்பவங்களைத் தாங்கிய உயிரை உருக்கிடும் கலை நிகழ்வுகள்
* விசேட படையணியின் வீர தீரச் செயல்கள்
* தமிழீழ இசைக்குழுவின் இசை வார்ப்புகள்
* அமெரிக்காவின் 'கிறீன் பரே'அணியினரிடம் பயிற்சிகள் பெற்ற சிறிலங்காவின் One Commondo, Two Commondo விசேட அணிகள் மகளிர் படையணியின் புதிய போர்த் தந்திரோபாய யுத்தத்தினால் முறியடிக்கப பட்ட 'மன்ன குளச் சமரின்' மாதிரி வடிவ நிகழ்வு.

இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறக் காத்திருக்கின்றன....

வீழ்ந்தது விதை
எழுந்தது பயிர்
கடந்தது நெருப்பு
உயர்ந்தது கரம்

பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும்... கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும்...
நேற்று எழுந்த எரிமலையை அணைத்தவர்கள்.
இன்று சமாதானப் பாதைக்கு வழி அமைத்தவர்கள் இந்த அக்கினிப் பூக்களா...!
நீங்களே வியந்து நிற்க.
உங்கள் பிள்ளைகள் வெற்றியோடு உங்களை நோக்கி... காணத்தவறாதீர்கள்.

மாலதி படையணியின் உருவாக்கத்தில் ...
களத்தில் நிற்கும் போராளிகளின் குரலாக வெளிவருகின்றது...

## வெஞ்சமரின் வரிகள்
பாடல் ஒலிப்பேழை



அன்பரசி படையணி, திலகா படையணி உட்பட ஆயிரக்கணக்கான பெண் போராளிகள் பங்கு கொண்டு நடாத்தும் மாபெரும் எழுச்சி நிகழ்வினைக் கண்டு மகிழ அனைத்து மக்களையும் வருக.. வருக... என அன்போடு அழைக்கின்றோம்.

காலம் : 10.10.2002
நேரம் : மாலை 3.00 மணி (தமிழீழ நேரப்படி)
இடம் : கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடல்

நன்றி
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

மகளிர் படையணி,
தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழம்.

(சி-038)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### வேலுப்பிள்ளை செந்தில்நாதன்

திதி-09.10.2002

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05-07-1931 | 01-10-2000 |

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து
எங்கள் அனைவருக்கும் வழிகாட்டிய
இதய தெய்வமே

பாசமிகு கணவனாய் நேசமிகு தந்தையாய்
நீர் வாழ்ந்து சென்ற பாதைகளை
கண்ணில் நீர் பெருக பார்க்கின்றோம்

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
இரு ஆண்டுகள் ஆனாலும் உங்கள்
நினைவுகள் எம் மனதை விட்டு என்றும் அகலாது

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.

(சி-047)

# தாயும் தாயகமும் நம்மிரு கண்கள் - நாளை பெண்கள் எழுச்சி நாள்

# நாம் அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ அல்ல விடுதலைக்காகப் போராடும் போராளிகள்!

## ஆசிரியர் தின விழாவில் இளம்பரிதி பேச்சு

ஆசிரியர்கள், நல்முத்துப்போல சமூகத்திற்குப் பயனைக் கொடுப்பவர்கள். சமூகத்தை கையாள்பவர்கள், சமூகத்தை வழிகாட்டுவது ஆசிரியர் குலம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கூறினார்.

கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த ஆசிரியர்தின விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, எமது ஆசிரியர்கள் மாணவ சமூகத்தை கௌரவமாக வழி நடத்தினால் தான் பொது சமூகம் தலை நிமிரும். பாரபட்சமற்ற, திறமைக்கு மதிப்பளித்தல், சுதந்திரமாக கற்பித்தல் போன்ற சூழ்நிலை ஏற்படுத்தல் வேண்டும். இதற்குத் தமிழர்களாகிய நாம் சுதந்திரமாகவும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழ வேண்டும். இதற்கு புலிகள் பலமாக இருக்க வேண்டும். புலிகள் பலமாக இருக்க வேண்டுமாயின் தமிழ் மக்கள் பலமாக இருக்க வேண்டும்.

நாம் உங்கள் முன் அதிகாரிகளாக நிற்கவில்லை. அரசியல்வாதிகளாகவும் இல்லை. விடுதலைக்காகப் போராடும் போராளிகளாகவே உங்கள் முன் நிற்கிறோம் எனக் கூறினார்.

கோப்பாய் கிளைத் தலைவர் மு. சுகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் ச.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் யாழ். இந்துக் கல்லூரி அ.பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர். (89)

# அரியாலை-ஆனந்தன் வடலி வீதி மக்கள் பாவனைக்குத் திறக்கப்பட்டது

அரியாலை - ஆனந்தன் வடலி வீதி 'ரிவிரஸ' இராணுவ நடவடிக்கையின்போது, மிதிவெடிகள் புதைக்கப்பட்டு, இராணுவவேலி அமைக்கப்பட்டதால், மக்கள் பாவனைக்குத் தடை செய்யப்பட்டது. இப்பிரதேசத்தில் முற்றுமுழுதாகத் தரைமட்டமாக்கப்பட்ட வீடுகள், காணிகளையும் பார்வையிட முடியாமலிருந்தது. கடந்த எட்டு ஆண்டுகளாக இந்நிலை நீடித்து வந்தது.

இப்பிரதேச மக்கள் மேற்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக, மிதிவெடிகள் அகற்றப்பட்டு, யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் ஏற்பாட்டின் கீழ், யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் முன்னிலையில் இப்பிரதேசம் திறந்து வைக்கப்பட்டு, மக்கள் பாவனைக்கு வந்துள்ளது.

# கட்டாக்காலி நாய்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்குக!

## வைத்தியசாலை அதிகாரி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

விசர்நாய்க் கடியினால் பாதிப்புறும் மக்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் இவ்வாறு கட்டாக்காலி நாயினால் கடியுண்ட இரு பொதுமக்களில் ஒருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே கட்டாக்காலி நாய்களை உரிய முறையில் ஒழிக்க ஆவன செய்யுமாறு மாநகரசபை ஆணையாளரையும், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரையும் யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் கேட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

# பேரியல் அஷ்ரப், ஹிஸ்புல்லாஹ் ரணிலைச் சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியும் பாராளுமன்ற உறுப்பினருமான பேரியல் அஷ்ரப், பாராளுமன்ற உறுப்பினரான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் பிரதமரைச் சந்தித்து பேசியுள்ளனர்.

இச்சந்திப்பு பற்றி ஹிஸ் புல்லாஹ் கருத்து தெரிவிக்கையில் - சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தரப்புக்குழு பங்குபற்றுவதில் காணப்படும் தெளிவின்மை, முஸ்லிம் மக்களின் விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றியும் ஆராயப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் இச்சந்திப்பு நிகழ்ந்ததாகத் தெரியவருகின்றது.

# மீளக் குடியமர அனுமதிக்குமாறு வேம்பிராய் மக்கள் கோரிக்கை

*சாவகச்சேரி வேம்பிராய்ப் பகுதியில் படையினர் நிலைகொண்டுள்ள பொதுமக்களின் 15வீடுகளில் இருந்து வெளியேறித் தம்மை மீளக் குடியமர அனுமதிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*அண்மையில் யாழ். வந்த மனித உரிமைகள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடமே இப்பகுதி மக்களால் கோரிக்கை விடப்பட்டிருக்கின்றது. தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி இப்பகுதி மக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் அனுப்பியிருந்த போதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (43)*

## விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன

(காரைநகர்)

அண்மையில் காரைநகர் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு விவசாய செய்கைக்குத் தேவையான கத்தி, மண்வெட்டி, அலவாங்கு, குப்பைவாரி, மருந்துத் தெளிகருவி, வாளி, விதைநெல், உரம் ஆகியவைகள் பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் வழங்கப்பட்டன. (52)

# எதிர்க்கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியை சந்தித்தனர்

(கொழும்பு நிருபர்)

எதிர்க்கட்சிகளின் தலைவர்கள்- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இச்சந்திப்பில் - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப், ஜே.வி.பியைச் சேர்ந்த ரில்வின் சில்வா, மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தினேஷ் குணவர்த்தன, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த குணசேகர ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது விடுதலைப்புலிகளால் ஆறு படையினர் கைது செய்யப்பட்டிருப்பது, அரசாங்கத்தின் இறைமையை மீறும் செயலெனவும், விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கமே இத்தகைய செயல்களுக்கு காரணமென்றும் இவர்கள் குற்றஞ்சாட்டியதாக ஜனாதிபதி செயலகம் நேற்றிரவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "கனவுகள்" தெருக்கூத்து அரங்கேற்றம்

(ஊரெழு)

யாழ். குடாநாட்டில் பிரதேச ரீதியாக கனவுகள் எனும் தெருக்கூத்து அரங்கேற்றப்பட்டு வருகின்றது. சமகால நிகழ்வுகளை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டும் மேற்படி தெருக்கூத்து விடுதலைப் புலிகளின் கலைப் பண்பாட்டுக் கழக ஆதரவில் தமிழீழக் கலைஞர்களால் காண்பிக்கப்படுகின்றது.

முற்றுமுழுதாக குறியீட்டு வடிவில் அமைந்த மேற்படி தெருக்கூத்து சுமார் 180 இடங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. (96)

## வரணியில் பழைய மாணவர் களின் நிதி திரட்டுதல்

(நாவற்காடு)

வரணி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் சமூக நன்மை கருதி பாடசாலை நிர்வாகத்திற்கு அப்பால் நின்று செயற்படக்கூடிய வகையில் நீண்ட அபிவிருத்தித் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இவர்கள் கிராமங்கள் தோறும் சென்று நிதி திரட்டி வருகின்றனர். இந்நிதியினைக் கொண்டு சிறுவர் பாடசாலை, ஆங்கில வகுப்புக்கள் யுவதிகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் என்பவற்றை ஆரம்பிக்க உள்ளனர். (92)

# திருத்தப்படாத நிலையிலுள்ள கோண்டாவில்-இருபாலை வீதி

(புன்னாலைக்கட்டுவன்)

கோண்டாவில் சந்தியில் இருந்து இருபாலைச் சந்திக்குச் செல்லும் பிரதானவீதி, மிக மோசமான நிலையில் சேதமடைந்து கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது.

பருவமழை ஆரம்பித்துள்ள இவ்வேளையில், போக்குவரத்தினை மேற்கொள்ளும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றனர். குன்றும், குழியுமாகக் காணப்படும் இவ்வீதியைத் திருத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் கவலை அடைந்துள்ளதுடன், விசனமும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இவ்வீதியிலேயே, கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் அமைந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

# தன்னிச்சையாக செயற்படுகிறாரா சந்தகிரி? பாதுகாப்பு அமைச்சகத்தில் கேள்வி!

**'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழில் வெளியான கட்டுரையின் சில பகுதிகள்.**

**தமிழில்-பனுவலர்**

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, தனது வீடு யாரோ இனந்தெரியாதவர்களால் படம் பிடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாகத் தீவிரமான சர்ச்சைகளில் இறங்கியுள்ளார் என்று அறியப்படுகிறது.

சந்தகிரியின் தனிப்பட்ட வசிப்பிடம் கம்பாலோலுவ என்ற இடத்தில் உள்ளது. அங்கே மோட்டார் சைக்கிளில் சென்ற அடையாளம் காணப்படாத இருவர் அந்த வசிப்பிடத்தைப் புகைப்படம் எடுத்துச் சென்றதாக சந்தகிரியின் அயலவர் தெரிவித்ததையடுத்து கடற்படைத் தலைமையகத்தைச் சேர்ந்த படை அலுவலர் ஒருவரால் வியாங்கொட பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகள் மூலம் முறைப்பாட்டில் கொடுக்கப்பட்ட இலக்கம், சந்தகிரிக்கு அடுத்த நிலையிலுள்ள வைஸ் அட்மிரல் விஜய விக்கிரமவினுடையது என்று தெரியவந்துள்ளதால், கடற்படைத் தளபதி ஆத்திரமடைந்துள்ளார். ஆனால் விஜய விக்கிரம புகைப்படம் எடுத்த சம்பவத்தில் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்று மறுத்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லக்கி பீரிஸ் இதுவரை நடத்தப்பட்ட விசாரணை களிலிருந்து எவ்வித பாரதூரமான குற்றங்களும் இழைக்கப்பட்டுள்ள தாகத் தெரியவரவில்லை.

இதன் காரணமாக அடையாள அணிவகுப்பு ஒன்றைக் கடற்படையினர் மத்தியில் நடத்தி சந்தேக நபரை அடையாளம் காண வேண்டுமென்று கடற்படைத் தளபதி சந்தகிரி வலியுறுத்துவதை லக்கி பீரிஸ் நிராகரித்துவிட்டார்.

இவ்விடயம் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்குச் சென்றபோது, அடையாள அணிவகுப்பு நடத்தும் அளவுக்கு எவ்வித பாரதூரமான குற்றவியல் விடயங்களும் நிகழவில்லை என்று கூறியுள்ளது. ஆனால் எல்லாவிடயங்களையும் புறக்கணிதது விட்டு கடற்படைத் தளபதி தன்னிச்சையாகக் கடற்படை விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளார். இவ்விடயத்தில் அவசரப்பட்டு செயற்படவேண்டாம் என்று முன்னாள் சட்ட மா அதிபரும் தற்போதைய பாதுகாப்பு அமைச்சருமான திலக் மாரப்பன ஆலோசனை கூறியிருந்த போதும் தன்னிச்சையாக செயற்படும் நிலையிலுள்ளார் வைஸ் அட்மிரல் சந்தகிரி.

கடற்படைத்தளபதி நியமித்த விசாரணைக்குழு இம்மாதம் இரண்டாம் திகதி தனது அடையாள அணிவகுப்பை மேற்கொண்டது. அந்த



அடையாள அணிவகுப்புக்கு ஊடாக இரண்டு கடற்படைச் சிப்பாய்கள் இனங்காணப்பட்டார்கள். ஆனால் அவ்விருவரும் எழுத்து மூலமாகத் தமக்கு இவ்விடயத்தில் தொடர்பு இல்லை என்று மறுத்துள்ளனர். இனங்காணப்பட்ட அவ்விரு கடற்படைச் சிப்பாய்களும் கடற்படைத்தளபதி சந்தகிரிக்கு அடுத்த நிலையிலுள்ள வைஸ் அட்மிரல் விஜயவிக்கிரமவின் அலுவலகப்பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஆவர்.

சிப்பாய்களில் ஒருவர் சந்தகிரியின் அயல்வீட்டுக்காரரான ஒரு சாட்சியால் இனங்காணப்பட்டார். அச்சிப்பாய்தான் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றார் என்றும் அயலவர் கூறியுள்ளார். 1993இல் பூநகரிமீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் முகத்தில் காயமடைந்த இச்சிப்பாய்க்கு போர்த்தழும்பு ஒன்று முகத்தில் இப்பொழுதும் காணப்படுவது காரணமாக அவர் சுலபமாக இனங்காணப்பட்டுள்ளார். இவ்விடயம் கடற்படையின் கட்டமைப்புகளுக்குள் மட்டுமல்ல விமானப்படை, தரைப்படை, பொலிஸ்படை ஆகியவற்றின் படைப்பிரிவுகளுக்குள்ளும் பெரும் பரபரப்பையும் ஐயங்களையும் தோற்றுவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இவ்விடயத்தை 'பெரிதாக தூக்கிப் பிடிக்க' வேண்டாம் என்று கேட்டிருப்பினும், தான் தொடர்ந்தும் இவ்விடயத்தில் நகர்வுகளை மேற்கொள்ளப்போவதாகக் கடற்படைத் தளபதி தனக்கு நெருங்கிய வட்டாரங்களுக்குக் கூறியுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தற்போது அமுலிலுள்ள அரசியல் யாப்புக்கிணங்க நிறைவேற்று அதிகாரமுள்ளவரும் முப்படைத் தளபதியுமான ஜனாதிபதிக்கு இவ்விடயங்களை விளக்கி அவசரக் கடிதம் எழுதியுள்ள சந்தகிரி, தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் அதில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வைஸ் அட்மிரல் சந்தகிரிக்கு ஓய்வு வழங்காமல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு சேவை நீடிப்பு வழங்கியுள்ளதன் காரணமாக, அவர் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணி தலைவர்கள் எவரதும் ஆலோசனைகளையும் புறக்கணித்து நடக்குமளவுக்கு துணிகரமாகச் செயற்படுகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. ■

# பலஸ்தீனப் பொலீஸாருடன் ஹமாஸ் கடும் சண்டை!

## இஸ்ரேலிய இராணுவம் அகதிமுகாமைத் தாக்கியது!!

(ஜெருசலேம்)

பலஸ்தீனப் பொலீஸாருடன் ஹமாஸிலிருந்து பிளவுபட்ட இஸ்லாமியத் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர். இத்தாக்குதலில் சிலர் கொல்லப்பட்டுள்ளது டன் பலர் காயப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலியப் படையினர் மீதும் யூதக் குடியிருப்புக்கள் மீதும் இரவு பகல் பாராமல் தொடர்ச்சியான றொக்கெட் தாக்குதல்களை ஹமாஸ் மேற்கொண்டவண்ணமிருந்ததாகவும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக பலஸ்தீனப் பொலீஸார் நடவடிக்கையில் இறங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது அதே வேளை, இஸ்ரேலியப் படையினர் தமது டாங்கிகளிலிருந்து நடத்திய தாக்குதலில் பதினான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதுடன் எண்பது பலஸ்தீனர்கள் காயமடைந்தனர்.





ஹமாஸின் செல்வாக்குக்குட்பட்ட அகதிமுகாம் பகுதி ஒன்றின் மீது இத்தாக்குதல் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதில் கொல்லப்பட்ட அனைவரும் பொதுமக்களாவர்.

நேற்று இத்தாக்குதல் பற்றிக் கருத்துத் தெரிவித்த இஸ்ரேலியத் தலைவர் ஏரியல் ஷரோன் நடவடிக்கை பூரணமாக வெற்றியளித்ததாகவும் பொதுமக்களுக்கும் ஓரளவு பாதிப்பு ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

### லூலா முன்னணியில்

நேற்றுக்காலைவரை எண்ணப்பட்ட வாக்குகளில் பிறேஸில் ஜனாதிபதி வேட்பாளர் லூலா முன்னணியில் திகழ்ந்தார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வர்த்தகத்துறையினர் ஆகியோரின் ஆதரவைப் பெற்றிருந்த எதிர்த்தரப்பு வேட்பாளர் இவருக்கு அடுத்த நிலையிலேயே உள்ளார்.

## அமெரிக்க ஜனாதிபதி மீண்டும் எச்சரிக்கை

ஈராக்குக்கு எதிரான கடும் எச்சரிக்கைகளை அமெரிக்க ஜனாதிபதி புஷ் மீண்டும் விடுத்துள்ளார். நேற்று வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின்மூலம் அமெ. மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் அவரது உரை ஒலிபரப்பப்பட்டது.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைன் அணுவாயுதம், உயிரியல் ஆயுதம், இரசாயன ஆயுதம் ஆகியவற்றை கொண்டிருக்கிறார் என்று தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி தானாகவே அவர் ஆயுதங்களைக் கைவிட வேண்டும். அல்லது அவை எமது நேச நாடுகளால் களைந்தெடுக்கப்படும் என்றார்.



தனதுரையில் செப்ரெம்பர் 11 தாக்குதலை ஞாபகப்படுத்திய புஷ் பயங்கரவாதத்திற்கு ஈராக் அடைக்கலம் கொடுத்திருக்கிறது என்று குற்றம் சுமத்தினார்.

### விசாரணைக்குழு அமைத்தார் புஷ்

கடந்த ஒருவாரகாலமாக அமெரிக்கப் பசுபிக் துறைமுகங்களில் இடம்பெற்றுவரும் வேலைநிறுத்த விவகாரத்தைப் பற்றி விசாரிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ் விசாரணைக்குழு ஒன்றை அமைத்துள்ளார்.

இவ்விசாரணைக்குழு தொழிலாளர்களுடனும் துறைமுக ஒப்பந்தகாரர்களுடனும் பேச்சுக்கள் நடத்தித் தீர்வை முன்வைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

### ஐவரிக்கோஸ்டில் கடும் சண்டை

தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த நகர் ஒன்றைக் கைப்பற்றுவதற்காக ஐவரிக்கோஸ்ட் அரச படையினர் கடும் சண்டையில் ஈடுபட்டனர். எனினும் அந்நகரம் கைப்பற்றப்படவில்லை.

### பஹ்ரைனில் இருந்து யேமனுக்கு அமெ.விசாரணைக்குழு

யேமனில் பிரான்ஸ் கப்பல் வெடித்து எரிவது தொடர்பாக ஆராய்வதற்கு பஹ்ரைனிலிருந்து அமெரிக்கக் கடற்படைக் குழு ஒன்று யேமனுக்குச் சென்றிருக்கிறது.


# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

# தலைமை அலுவலகத் திறப்புவிழா

## 09.10.2002

*நீதிக்கும் விடுதலைக்குமான மாணவசக்தியின் களஞ்சியம்*

ஒரு பெரிய ஆலமரம், இலைகள் ஒவ்வொன்றாய்க் கீழே விழ ஆரம்பித்தன. வீழ்ந்து கொண்டே இருந்தன. எங்கே அந்த ஓங்கி வளர்ந்த பாரிய விருட்சம் பட்டு விடுமோ என்று யாவரும் அச்சமுற்றனர். சிறிது காலம் சென்றது.......மீண்டும் புத்தம் புதிய துளிர்கள் தோன்ற ஆரம்பித்தன. எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர்.

இந்நிலையில் 'தமிழ் அலைவு' எனக் குறிப்பிடப்படும் ஈழத்தமிழரது சர்வதேச புலம்பெயர்வின் பின்னாக குறிப்பாக தமிழ் மாணவரிடையே தமிழீழ மக்களினது அறிவியல், பொருண்மியம், பண்பாடு மற்றும் இதர வளங்களைப் பேணி முன்னேற்றவும், தமிழ் தேசத்தைக் கட்டியெழுப்பவும் உந்து சக்தியாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அமைக்கப்பட்டிருப்பது மகிழ்வூட்டுகிறது.

'எமது போராட்டம் கல்விக்குக் கவசமாக இருப்பது போல் கல்வியும் எமது போராட்டத்திற்குக் காப்பரணாக நிற்க வேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் மாணவ சமுகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமைப்பாடாகும்' என்ற தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வரலாற்று வேண்டுகையை இங்கு நினைவூட்டுவது சாலப் பொருத்தமாகும்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினை அங்குரார்ப்பணம் செய்து பணியாற்றும் துணிகரமானதும் தொலை நோக்குள்ளதுமான முயற்சியில் ஈடுபட்டுள்ள யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை, மற்றும் Toranto Mimaster, Corleton, ottawa, Rutgers, Stuttgart, Cambridge போன்ற கனேடிய, அமெரிக்க, ஜேர்மன், பிரித்தானிய பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், தமிழ்க் கல்விமான்களுக்கும் எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைப் பெருமகிழ்ச்சியுடனும் எதிர்பார்ப்புடனும் தெரிவித்துக்கொள்கிறோம். ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து அரை நூற்றாண்டுக்கு மேலாக, தமிழ் சமுகத்தினால் விடுதலைக்கும் கௌரவத்திற்கும், நியாயத்துக்குமாக இடைவிடாது தொடரப்பட்ட அரசியற் போராட்ட சந்தர்ப்பத்தை நோக்கும் போது இவ்வாறான அமைப்பினை ஸ்தாபிக்க வேண்டிய நீண்டகாலத் தேவையும் இருந்ததுடன் அதற்கான தகுந்த தருணமும் இதுவாகவுள்ளது.



சட்டபூர்வமான போர்வையில் தமிழ்மாணவர்கள் மீது திணிக்கப்பட்ட அரச அனுசரணையுடனான பல்வேறு வகையில் அமைந்த ஒடுக்குமுறைகள், தேசிய, சமூக - பொருளாதார அரங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் செயலூக்கமுள்ளவர்களாக தமிழ்மாணவர்கள் வருவதற்குக் காரணமாயின் இதன் விளைவாகத் தமிழீழத்தின் மாணவர் சமுகமானது அரசியல் ரீதியாக அதிக விழிப்புணர்வு பெற்றது. அரசியல் பங்களிப்பில் பாராட்டத்தக்க மட்டத்தையடைந்துள்ளது. அத்துடன் தெற்காசியாவிலுள்ள தமது சகபாடிகளைவிட, இச்சமுகம் அதிகளவு தேசிய, மொழி, கலாசார, பிரதேச ஒருமைப்பாட்டு உணர்வுகளைக் கொண்டுள்ளது.

ஈழத்தமிழர்களில் 50,000 இற்கும் அதிகமானவர்கள் உலகெங்கிலுமுள்ள சிறப்பு பல்கலைக்கழகங்களில் பட்டதாரி மற்றும் பட்டதாரி மாணவ மட்டங்களில் தமது கல்வி இலக்குகளை தொடர்ந்து கொண்டிருப்பதைக் காண்கையில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. உள்நாட்டு யுத்தத்தினால் பேரழிவுற்ற தமிழீழத்தைக் கட்டியெழுப்பி புத்துயிரளிப்பதற்கு இது ஒரு விலைமதிப்பற்ற மூலவளமாகும்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையானது சர்வதேச மாணவர் சமுகங்களிடையே ஒரு பாலமாகப் பயன்படுவது மட்டுமல்லாது, ஜனநாயகமற்ற அரசியல் இராணுவ அரச அமைப்பு முறையினால் உடல், உளரீதியாக தமது சொந்த நாட்டில் காட்டுமிராண்டித்தனமாக அச்சுறுத்தலுக்குள்ளாகும், குரலெழுப்ப முடியாதுள்ள தமிழ் மக்களின் அச்சங்களையும், கண்ணீரையும் போக்குவதற்கும் பின்னிற்காது என்பது எமது அசையாத நம்பிக்கையாகும்.

சர்வதேச ரீதியில், இளம் சந்ததியினருக்கு தாய்மண்ணில் ஈர்ப்பை ஏற்படுத்தவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முயற்சி, காலத்தின் நிர்ப்பந்தத்தால் உலகம் முழுவதும் சிதறடிக்கப்பட்டிருக்கும் அனைத்து தமிழ் மக்களையும் தாய் மண்ணில் ஒன்றிணைய செய்வதோடு, தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் சகல துறைகளிலும் தமிழீழ மாணவர்கள் தமது சாதனைகளை தொடர்ந்தும் நிலைநாட்ட வழியமைக்க வேண்டும்! எமது மண்ணின் எமது மக்களின் எமது இனத்தின் விடிவுக்காக உழைக்க வேண்டும்! உயர்ந்த இலட்சியமும் உண்மையான உழைப்பும் இணைந்து விட்டால் விடிவு நிச்சயம். எமது தமிழீழ மாணவர்கள் நாளைய புதுயுகத்தினை படைக்க முன்னோடியாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் ஓங்கிய குரலாய், சர்வதேச தமிழீழ மாணவ சமூகத்தின் பிரதிநிதியாய் வீறுநடை போடப் போகும் இந்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வியாபித்து பெருவிருட்சமாக ஆசி வேண்டுவதோடு எமது மனப்பூர்வமான ஆதரவையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தோற்றம் பெறும் நிகழ்வு எமது இனத்தின் வரலாற்றில் முக்கியமான ஒரு நிகழ்வாக அமையக்கூடும் அமையவும் வேண்டும்! எமது நாளைய சந்ததிக்காய் ஒரு ஆரோக்கியமான தேசத்தை கட்டி எழுப்பும் கடமையை செய்ய வேண்டும்! சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இம் முயற்சியில் வீறுடன் செயற்படும் போது இப்பேரவை வெற்றி பெற்றதற்காக எம் வரலாறு பதிவு செய்து கொள்ளும் அந்த வெற்றிக்காய் வாழ்த்துகிறோம்.

## - வாழ்த்துவோர் -

☆ யாழ். ஆயர்
அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம்

☆ கௌரவ தி. மகேஸ்வரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
இந்து கலாசார அமைச்சர்.

☆ கௌரவ பெ. சந்திரசேகரன்,
பாராளுமன்ற உறுப்பினர், சமூக அபிவிருத்தி அமைச்சர், நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ பிரதி அமைச்சர்.

☆ ரவிஷங்கர் கமலச்சந்திரா,
பொதுச் செயலாளர்,
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
றொறொன்ரோ பல்கலைக்கழகம்,
கனடா.

☆ செல்வி. ரேணுகா விஜியநாதன்,
உப செயலாளர்,
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
Rutgers University,
அமெரிக்கா.

☆ திரு. க. விருத்தாச்சலம்,
உபதலைவர்,
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

☆ திரு. து. வைத்திலிங்கம்,
யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.

☆ பேராசிரியர் ஜோசப் ஏ. சந்திரகாந்தன்,
றொறன்ரோ பல்கலைக்கழகம் .

☆ தமிழ் மாணவர் சங்கம்,
றொறொன்ரோ பல்கலைக்கழகம்.

☆ சாய் தர்மலிங்கம்,
செயலாளர் ,
தமிழ் பல்கலைக்கழக மாணவர்
பட்டதாரிகள் ஒன்றியம்,
றொறொன்ரோ பல்கலைக்கழகம்.

☆ கி. சுதன்
ஈழமுரசு
பாரிஸ் ~ பிரான்ஸ்.

☆ Dr. சி. குமரவேள்,
செயலாளர் ,
அரசாங்க வைத்தய அதிகாரிகள் சங்கம்.
(யாழ். கிளை)

☆ ஆ. கி. சிவசுப்பிரமணியம்,
கௌரவ செயலாளர்,
அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

☆ வி.தயாபரன்,
செயலாளர்,
மாணவர் ஒன்றியம்,
உயர் தொழில்நுட்ப நிறுவனம்.

☆ பா. சிவரூபன்,
செயலாளர்,
பகல்நேர மாணவர் மன்றம்,
தொழில்நுட்பக் கல்லூரி.

☆. தமிழ் மாணவர்கள்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.

☆ தி. தவநேசன்,
மாணவர் ஒன்றியம்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.

☆ யாழ் தேசிய கல்வியற் கல்லூரி.

☆ திரு. சுப்பிரமணியம் பரமநாதன்,
தலைவர்,
மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம்,
யாழ்.மாவட்டம்.

☆ திரு. சி. சிவபாலன்,
தலைவர், தமிழ் இலக்கிய மன்றம்,
மொறட்டுவ பல்கலைக்கழகம்.

☆ திரு. த. மகாசிவம்,
பொதுச்செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

☆ செல்லத்துரை சேதுராஜா,
தலைவர், வடமாகாண அதிபர் சங்கம்.

**தொடர்புகளுக்கு:- பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 - 2223768**

**விளம்பர அனுசரணை:- நல்லூர் ப.நோ.கூ.சங்கம் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம் சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்**

# புவியியல் - 1

*எல்லா வினாக்களுக்கும் விடை தருக.*

**1. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.**

1. புவியோடு பளிங்குப் பாறைகளையும் அவற்றை மூடிய அடையற் பாறைகளையும் கொண்டுள்ளது. (.....)
2. சுவிற்சலாந்து கடிகார உற்பத்தியில் உலகப் புகழ் பெற்றுள்ளது. (.....)
3. திட்டமிட்ட பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுதல் மிகமிகக் குறைவாகும். (.....)
4. மனித நாகரிக மேம்பாட்டிலும் அழிவிலும் பங்களிப்புச்செய்யும் உலோகம் தங்கம் ஆகும். (.....)
5. மரக்கறி, பழச்செய்கையில் இன்று பச்சை வீட்டுப் பயிர்ச்செய்கை முறையே அதிகளவு பின்பற்றப்படுகிறது. (.....)
6. மகாவலித் திட்டத்தின் கீழ் தரைக்கீழ் மின்பிறப்பாக்கி நிலையம் றந்தெனிகலவில் அமைக்கப்பட்டுள்ளது. (.....)
7. மாதுறுஓயா அபிவிருத்தித் திட்டத்திற்கு சுவீடன் நாடு உதவி வழங்கியுள்ளது. (.....)
8. இலங்கையில் கட்டுநாயக்கா ஊக்குவிப்பு வலயத்தில் அதிகளவில் பாரக் கைத்தொழில்களே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (.....)
9. இலங்கையில் முதலாவது கைத்தொழில் பேட்டை எக்கலவில் நிறுவப்பட்டுள்ளது. (......)
10. சீனா இலங்கையிடம் இருந்து றப்பரை அதிகளவில் கொள்வனவு செய்கிறது. (......)

***2. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.***

11. இப்படத்தில் முறையே 1,2,3 என்ற இலக்கங்களால் காட்டப்பட்டுள்ள மலைத் தொடர்கள்
    1) பேதுருதாலகால, சிவனொளிபாதமலை, நக்கிள்ஸ்
    2) நக்கிள்ஸ், கிரிகஸ்பொத, பேதுருதாலகால
    3) பேதுருதாலகால, லுணகல, சிவனொளிபாதமலை
    4) நமுனுகுல, நக்கிள்ஸ், தோட்டப்பால




12. இப் படத்தில் முறையே A,B,C என்ற எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள மேட்டு நிலங்கள்
    1) கொஸ்லாந்த, மகாவலத்தன்ன, வெலிமடை
    2) கற்றன், கண்டி, வெலிமடை
    3) கண்டி, மகாவலத்தன்ன, வெலிமடை
    4) கண்டி, கற்றன், வெலிமடை
13. பருத்தித்துணி கைத்தொழில் முன்னணி வகிக்கும் நாடுகள்
    1) பிரான்ஸ்,யப்பான்,ஸ்பெயின்,ஐக்கிய இராச்சியம்
    2) சீனா,யப்பான்,பெல்ஜியம்,ஐக்கிய இராச்சியம்
    3) ஐக்கிய இராச்சியம்,ஸ்பெயின்,நோர்வே,யப்பான்
    4) ஐக்கிய அமெரிக்கா,ரஷ்யா,இந்தியா,சீனா
14. உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொன் உடை ஊழியர் உற்பத்தியாக்கும் இலத்திரனியற் பொருட்கள்
    1) தொலைக்காட்சி,மோட்டார்வாகனம்,தொலைபேசி, ஆகாயவிமானம்
    2) கணினி,வானொலி,தொலைக்காட்சி,தொலைபேசி
    3) இன்ரனெற்,மோட்டார் வாகனம்,தொடர்பாடல்கருவிகள், போராயுதம்
    4) கப்பல்,கணினி,தொலைபேசி,போராயுதம்
15. A, B, C என்ற எழுத்துக்கள் குறிக்கும் கரையோர இயல்புகளைக் காட்டும் விடை
    1) முனை, களப்பு, குடாநாடு
    2) குடா, கடனீரேரி, முனை
    3) கடனீரேரி, குடாநாடு, முனை
    4) களப்பு, முனை, குடா




16. இப் பிரதேசத்தில் பரம்பிக் காணப்படும் இயற்கைத் தாவரம்
    1) கண்டல்கள் 2) முட்புதர்காடுகள்
    3) அயன ஈர பசுமையான காடுகள் 4) புல்நிலங்கள்
17. இறால்,சிங்கிறால்,நண்டு போன்ற மீன்கள் அதிகமாக வாழவும் இனப்பெருக்கம் செய்யவும் உகந்த நீர்நிலை
    1) ஆழ்கடல் பிரதேசம் 2) உள்நாட்டு நீர்நிலைகள்
    3) மலைநாட்டு நீர்த்தேக்கங்கள் 4) உவர்நீர் கடனீரேரிகள்
18. மத்திய கோட்டுக் காடுகளுக்கும் ஊசியிலைக் காடுகளுக்கும் இடையில் காணப்படும் பொது அம்சம்
    1) கடதாசி உற்பத்திக்குப் பயன்படுதல்
    2) ஒரே அகலாங்கில் காணப்படுதல்
    3) அடர்த்தியான கீழ் வளரிகளைக் கொண்டிருத்தல்
    4) வருடம் முழுவதும் பசுமையாக இருத்தல்.



# மாணவர் மலர்

*பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 19,20ஆம் வினாக்களுக்கு விடை தருக.*

| வெப்பநிலை | மழைவீழ்ச்சி | மண் |
|---|---|---|
| A 15° <C - 27°< C | D 1900 M.M வரை | G செம்பூரான் மண் |
| B 27°< C மட்டும் | E 2000 M.M அதிகமாக | H சாம்பல் நிற மண் |
| C 21° < C -32 °<C வரை | F 2000 - 5400 M.M வரை | I சரளை கலந்த செம்பூரான் மண் |

19. தேயிலைச் செய்கைக்குப் பொருத்தமான காரணிகள் அடங்கிய விடை எது?
    1) AFG 2) BDH 3) CFG 4) AEH
20. இறப்பர் பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான காரணிகள் அடங்கும் விடை எது?
    1) AEI 2) BEH 3) CEG 4) BEI
21. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டுக்குப் பொருத்தமான கைத் தொழில் கொள்கையை வகுக்கும்போது பின்வருவனவற்றுள் எக்காரணி மீது அதிக கவனஞ் செலுத்த வேண்டும்
    1) பெரிய அளவிலான கைத்தொழில்களை ஆரம்பித்தல்.
    2) இலத்திரனியல் கைத்தொழில்களை ஆரம்பித்தல்.
    3) உள்நாட்டு கமத்தொழில் முயற்சிகளை ஆதாரமாகக் கொண்ட கைத்தொழிலை ஆரம்பித்தல்.
    4) பருமனில் சிறிய ஆனால் பெறுமதி மிக்க ஆதாரமாகக் கொண்ட கைத்தொழிலை ஆரம்பித்தல்.
22. இலங்கையின் தாழ்நில உலர்வலயம் பின்வரும் பயிர்களுள் எதனைப் பயிர் செய்வதற்கு மிகவும் பொருத்தமானது
    1) மிளகு 2) மரமுந்திரிகை 3) கறுவா 4) கராம்பு
23. கைத்தொழில் நடவடிக்கைகளால் அதிகளவு மாசுபடுத்தப்படும் கடல்
    1) அரபிக்கடல் 2) செங்கடல் 3) போல்டிக்கடல் 4) கரிபியன்கடல்
24. புல்மோட்டைப் பிரதேசத்தில் பெருமளவில் கிடைக்கும் கனியம்
    1) அப்பதைற் 2) இல்மனைற் 3) சிலிக்கா 4) களிமண்
25. துரித மகாவலித் திட்டத்தின் மூலம் பெறப்படும் நன்மைகளை
    1) அவ்வலயங்களில் குடியேறியோர் அனுபவிக்கின்றனர்.
    2) உதவி வழங்கிய நாடுகளின் நிபுணர்கள் அனுபவிக்கின்றனர்.
    3) அப்பிரதேச அரசியல்வாதிகள் அனுபவிக்கின்றனர்.
    4) இலங்கையில் வாழும் அனைவரும் அனுபவிக்கின்றனர்.

**3. கீழே "அ" நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பயிர்கள் விளையும் பகுதிகளை 'ஆ' நிரலில் இருந்து தெரிந்து அதன் எழுத்தை எதிரிலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 26. | நெல் | .............................. | A கிராண்ட் பாங் |
| 27. | கோதுமை | .............................. | B மத்திய தரைக்கடல் நாடுகள் |
| 28. | கரும்பு | .............................. | C ஐக்கிய அமெரிக்கா |
| 29. | பழச்செய்கை | .............................. | D கர்பியன் நாடுகள் |
| 30. | கொக்கோ | .............................. | E இடைவெப்ப வலயப் புல்வெளிகள் |
| | | .............................. | F கியூபா |
| | | .............................. | G அயன மண்டல பருவக்காற்று நாடுகள் |
| | | .............................. | H உஸ்பெகிஸ்தான் |

***4. பொருத்தமான சொற்களைக் கொண்டு கிறீட்ட இடங்களை நிரப்புக.***

31. புவியின் வானிலை மாற்றங்களும் காலநிலை வேறுபாடுகளும் உருவாகும் வளிமண்டலப் படை .............................. மண்டலம் ஆகும்.
32. இறக்குமதி செய்யப்பட்ட இரும்புக்கழிவுகளைக் கொண்டு உருக்கு உற்பத்தி செய்வதில் ........................ உலகில் முதலிடம் வகிக்கின்றது.
33. சூரியனுக்கு அண்மையில் இருப்பதும் வேகமான சுற்றுப்பாதையைக் கொண்டமைந்ததுமான உட்கோள்களில் ........................ ஒன்றாகும்.
34. புவியின் உட்பகுதி குழம்பான மக்மா வெளியேறி குளிர்ச்சி அடைந்து இறுகுவதனால் உருவாகும் பாறை ...................... எனப்படும்.
35. இடை வெப்ப வலயத்தின் வட பகுதியில் முனைவை அண்டிக் காணப்படும் நீண்ட கூரான இலைகளையும் கீழ் மறாக்கிய தன்மை கொண்ட பசுமையான காடுகள் .................... ஆகும்.



# புலமைப்பரிசில் வினாத்தாள் —1

1. தரப்பட்ட படங்களை வைத்து விடை தருக. ஐந்தாம் இலக்கத்தில் வரவேண்டிய அம்புக்குறியை வரைக.

| ⇒ | ⇓ | ⇐ | ⇑ | | ⇓ |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

2. உருவம் 1 இற்கு பொருத்தமான உருவை அடையாளமிடுக.



| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|

✹ வினையடிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியை இடுக.

உ+ம் நான் (வா) வருகிறேன் (நிகழ்காலம்)

3. நீங்கள் (வா) ........................ (நிகழ்காலம்)
4. நீ (வா) ........................ (நிகழ்காலம்)
5. நாங்கள் (வா) ........................ (நிகழ்காலம்)
6. ஆசிரியர் (வா)........................ (நிகழ்காலம்)
7. மாடு (வா) ........................ (நிகழ்காலம்)

8. பின்வரும் சொற்களில் வினைச் சொல்லாக அமைவது
   I நான் II மரங்கள் III விளையாடினான் IV கற்கள்
9. அரண்மனைகளில் மகளிர் தங்குமிடத்தை எவ்வாறு அழைப்பர்
   I மடம் II அந்தப்புரம் III நந்தவனம் IV காடு

10. கீழே உள்ள விடுகதையை விளக்குக.
    *'நன்னுவார் தின்னமாட்டார்'*
    I கத்தி
    II திறப்பு
    III கத்திரிக்கோல்
    IV பாக்குவெட்டி

✹ விடை தருக.

11. சமாதானத்தைக் குறிக்கும் புறா வெண்புறா போல. சமாதானத்தைக் குறிக்கும் இலை யாது?
12. தாவரம் செழித்து வளர அவசியமான காரணிகள் 3 தருக?
13. தலதா மாளிகை அமைந்துள்ள இடம் யாது?
14. 
    படம் காட்டுவது
    1. ஆற்றில் பயணஞ் செய்யும் கூட்டம்
    2. வெள்ளப்பெருக்கு
    3. ஒரு கிராமம்
15. பின்வரும் படங்களினை ஒழுங்குமுறையாகக் காட்டுவது:



1. 4,1,2,3 2. 1,2,4,3 3. 4,3,2,1 4. 2,4,1,3

✹ ▢த்திலுள்ள இலக்கத்துக்கு சமமான இலக்கத்தை அருகில் உள்ள கூட்டில் இருந்து தெரிந்து எடுங்கள்.

16. 8x[4x4]=26
    1. [8x1/2] 2. [4x16] 3. [2x16] 4. [32x1/4]
17. முதலாவது படத்திலிருந்து வேறுபட்ட படத்தின் கீழ் கோடிடுக.



18. பஸ்சில் பயணம் செய்பவர்கள்
    1. ஆசைக்காகப் பயணம் செய்கிறார்கள்
    2. பற்பல தேவைகளுக்காக செல்லுகிறார்கள்.
    3. காரில் போவதற்கு பயந்து செல்கிறார்கள்
19. பாடசாலையில் காலைக்கூட்டம் நடைபெறுவது
    1. எல்லா மாணவர்களையும் அமைதியாக இருக்க செய்ய
    2. நாள் விடயங்களை மாணவர்களுக்கு அறிவிக்க
    3. இடநெருக்கடியை தவிர்க்க
20. பள்ளி மாணவர்கள் செய்து விளையாடிய காற்றாடியின் படம் இங்கு காட்டப்படுகின்றது. இது செய்வதற்கு தேவையான பொருள்கள் 3 தருக?
    ..............................
    ..............................
    ..............................



21. இது எதன் வேகத்தினால் இயங்கும்?
    ..........................................................................

(பூனை, மீன், புலி, தவளை, பாம்பு, முதலை, திமிங்கிலம், ஆடு, காகம், புறா, ஆமை, முயல், கழுகு, கிளி) என்பவற்றை பயன்படுத்தி கீழ்வரும் அட்டவணையை நிரப்புக.

| நீரில் வாழ்வன (22) | நிலத்தில் வாழ்வன (23) | நிலத்திலும் நீரிலும் வாழ்வன (24) | வானில் சஞ்சரிப்பன (25) |
|---|---|---|---|
| .................. | .................. | .................. | .................. |
| .................. | .................. | .................. | .................. |
| .................. | .................. | .................. | .................. |

26. X=10 எனில்
    IV= IX = V= VII=
27. 1. (2)—(4)—( )—(8)
    2. [3] [4] → 12 எனில் [7] [3] → ?



28. வீதிகளில் காணப்படாத அடையாளம்.



38. சந்திரன் இரவில் மட்டும் பிரகாசிப்பதற்கு காரணம்
    1. அது வானில் தெரிவதால்
    2. சூரிய ஒளி பட்டுத்தெறிப்பது
    3. சூரியன் இல்லாததால்
36. 1999 நவம்பர் மாதத்தில் 30 நாட்கள் காணப்பட்டன எனில் 2000 நவம்பர் மாதம் எத்தனை நாட்களை கொண்டதாக இருக்கும். (ஒரு வருடத்தில் 3651/4 நாட்கள்)

செ.சிவநேசன்
யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்



## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) மாதிரிப் பரீட்சை 2002 டிசம்பர்

# வணிகக்கல்வியும் கணக்கீடும் - 1



எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. நுகர்வோர் தேவைக்கேற்ப வளங்களின் தன்மையை மாற்றி அமைப்பதன் மூலம் பெறுமதி ஊட்டல்
   1) கொள்வனவு 2) உற்பத்தி
   3) சேவை 4) வியாபாரம்
2. அகச் சூழலாக கருத முடியாத காரணி பின்வருவனவற்றுள் ஏது?
   1) முகாமையாளர் 2) நடுவர்
   3) உரிமையாளர் 4) பொருளாதாரம்
3. தேவைகளை பூர்த்திசெய்வதற்கு மனித உள்ளங்களில் ஏற்படக்கூடிய ஆசைகள் எவ்வாறு அழைக்கப்படும்
   1) விருப்பங்கள் 2) தேவைகள்
   3) பொருட்கள் 4) சேவைகள்
4. நுகர்வோர் மத்தியில் வியாபாரக்குறி செல்வாக்கு செலுத்தும் பொருளின்வகையை தெரிக.
   1) வசதிப்பொருட்கள் 2) சிறப்புப்பொருட்கள்
   3) நாடாப்பொருட்கள் 4) கடைப்பொருட்கள்
5. கொள்வனவு செய்வோரின் நோக்கம் வேறுபடுத்திக் காட்டும் பிரதான காரணியாக அமைவது
   1) மொத்த வியாபாரத்தையும் சில்லறை வியாபாரத்தையும்
   2) பேரளவு உற்பத்தியையும் சிற்றளவு உற்பத்தியையும்
   3) பொருட்களையும் சேவையையும்
   4) பிரதான உற்பத்தியையும் உபஉற்பத்தியையும்

பின்வரும் கொடுக்கல் வாங்கலை அடிப்படையாகக் கொண்டு 6ஆம், 7ஆம், 8ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A: ரூ.15,000 பெறுமதியான தளபாடமும் ரூ. 20,000 காசும் மூலதனமாக முதலீடு செய்யப்பட்டது.
B: விளம்பரக்கட்டணமாக ரூ. 7,000 வியாபாரத்தின் பொருட்டு செலுத்தப்பட்டது.
C: பெற்றுக் கொள்ளப்பட்ட 10% நண்பர்கடன் ரூ.30,000
D: தொலைபேசிக் கட்டணம் ரூ. 6,000 உடமையாளருக்காக நிறுவனத்தால் செலுத்தப்பட்டது.

6. பற்றாக கருதக்கூடிய கொடுக்கல் வாங்கல் எது?
   1) A 2) B 3) C 4) D
7. வணிகத்தின் தேறிய இலாபத்திலும் சொத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் எது?
   1) A 2) B 3) C 4) D
8. புறத்துப் பரிப்பிலும் சொத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் எது?
   1) A 2) B 3) C 4) D
9. தளபாடத்தை வாங்கி விற்கும் நிறுவனம் ஒன்று ரூ.10,00,000 பெறுமதியான தளபாடத்தை கடனுக்கு கொள்வனவு செய்தது. இது முதலில் பதியப்படும் ஏடு
   1) முதற்குறிப்பேடு 2) கொள்வனவு நாளேடு
   3) காசேடு 4) பேரேடு
10. நிறுவனம் ஒன்று திரு.அன்ரன் என்பவருக்கு ரூ.3,000 பெறுமதியான சரக்கினை திருப்பி அனுப்பியது. இதன் நடவடிக்கையை நிறுவன ஏட்டில் பதிவதற்கான மூல ஆவணம்.
    1) வரவுத்தாள் 2) செலவுத்தாள்
    3) அடியிதழ் 4) பட்டியல்
11. தவணைக்கட்டணம் செலுத்தத் தவறினால் பொருளை பறிமுதல் செய்யும் உரிமை அற்ற தவணைக் கட்டண முறை
    1) கேள்விமுறை 2) ஏலமுறை
    3) வாடகைக் கொள்வனவு
    4) பிற்போடப்பட்ட கொள்வனவு
12. சர்வதேச வர்த்தகத்தினை நியாயப்படுத்தும் கோட்பாடு எது?
    1) ஒப்பீட்டு செலவுக் கோட்பாடு
    2) எல்லை செலவுக் கோட்பாடு
    3) செலவுக் கோட்பாடு
    4) சிக்கனக் கோட்பாடு
13. இறக்குமதியாளர் ஒருவர் ஏற்றுமதியாளருடன் தொடர்பு கொண்டு தானே இறக்குமதி செய்தல்
    1) நேரில் முறை இறக்குமதி
    2) நேர் முறை இறக்குமதி
    3) நட்பு முறை இறக்குமதி
    4) விலைமனு இறக்குமதி
14. பின்வரும் நிறுவனங்களுள் சட்ட ஆளுமை உடைய நிறுவனம் எது?
    1) வரையறுத்த பொதுக் கம்பனி
    2) தனி வியாபாரம்
    3) பங்குடமை வியாபாரம்
    4) திணைக்களம்
15. சமூக நலன் நோக்குடைய தனியார்துறை நிறுவனம் பின்வருவனவற்றுள் எது?
    1) கூட்டுத்தாபனம் 2) திணைக்களம்
    3) கூட்டுறவு 4) சொந்தக்கம்பனி
16. பண்டங்களின் கேள்விக்கும் நிரம்பல்களுக்குமிடையில் சமநிலையைப் பேணுதல்
    1) களஞ்சியப்படுத்தல் 2) தொடர்பாடல்
    3) விளம்பரப்படுத்தல் 4) வியாபாரம்
17. வியாபார இரகசியங்களை பாதுகாக்கக்கூடிய நிறுவன வகை
    1) தனிவியாபாரம் 2) பங்குடமை வியாபாரம்
    3) சொந்தக்கம்பனி 4) மக்கள் கம்பனி
18. ரூபா100,000 பெறுமதியான (கிரயம்) கணனி 5வருட பயன்தரு ஆயுட்காலத்தில் அதன் கழிவுப்பெறுமானம் ரூ.20,000 நேர்கோட்டு முறைக்கமைய பெறுமானத் தேர்வு
    1) 17,000 2) 16,000
    3) 16,500 4) 18,000
19. ஆகக் குறைந்தது இரண்டு நபர்களைக் கொண்ட வியாபார அமைப்பு
    1) சொந்தக் கம்பனியும் மக்கள் கம்பனியும்
    2) பங்குடமையும் சொந்தக் கம்பனியும்
    3) சொந்தக் கம்பனியும் மக்கள் கம்பனியும்
    4) பங்குடமையும் பொதுக்கம்பனியும்
20. பங்குடமை நன்மதிப்புடைய நபரை பங்காளராக பெயர் பட்டியலில் சேர்த்திருப்பின் அவர்
    1) இயங்கும் பங்காளர்
    2) பெயரளவில் பங்காளர்
    3) போலிப் பங்காளர்
    4) உறங்கும் பங்காளர்
21. உச்ச திருப்தியை பெற்றுக்கொள்ளும் வகையில் பண்டங்களைக் கொள்வனவு செய்பவர்
    1) விவேகமுள்ள நுகர்வோன்
    2) நியாயமுள்ள நுகர்வோன்
    3) துடிப்புள்ள நுகர்வோன்
    4) வீரமுள்ள நுகர்வோன்
22. விமான மார்க்கமாக கடிதம், பார்சலை பாதுகாப்பாக முகவர் மூலம் அனுப்பி வைக்கும் முறை,
    1) ரெலெக்ஸ் சேவை
    2) ஈமையில் சேவை
    3) வலைப்பின்னல் சேவை
    4) கூரியர் சேவை
23. காப்புறுதி செய்யும் பொருளில் அல்லது ஆயுளில் உரித்து இல்லாதவர் அதனைக் காப்புறுதி செய்யமுடியாது. இத் தத்துவம்
    1) இழப்பீட்டுத் தத்துவம்
    2) உரிமைத் தத்துவம்
    3) மிக்குயர் நன்னம்பிக்கைத் தத்துவம்
    4) பதிலாள் வைப்புத் தத்துவம்
24. புளூசிப் கம்பனிகளில் தொடர்பில் கணிக்கப்படும் சுட்டெண்
    1) சிறீலங்கா விலைச் சுட்டெண்
    2) பங்கு மொத்த விலைச் சுட்டெண்
    3) வினைத்திறன் மதிப்பீட்டுச் சுட்டெண்
    4) நுகர்வோர் பாதுகாப்புச் சுட்டெண்
25. முயற்சிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குரிய திறன்களை இனங்கண்டு கொள்வது
    1) சுயசக்தி மதிப்பிடல் 2) தொழில் பயிற்சி
    3) இலத்திரன் தபால் 4) இலத்திரன் வர்த்தகம்
26. முயற்சியாளர்களுக்கு நிதி முகாமைத்துவ ஆலோசனை வழங்கலைப் பிரதான நோக்காகக் கொண்ட வங்கிகள்
    1) இலங்கைவங்கிகள் 2) மத்தியவங்கிகள்
    3) வியாபாரவங்கிகள்
    4) ஜனதா காப்புறுதி நிறுவனம்
27. பெரும் பெறுமதியான சொத்துக்களை குத்தகைக்கு பெறக்கூடிய கம்பனி
    1) நிதிக்கம்பனி 2) குத்தகைக் கம்பனி
    3) வியாபார வங்கி 4) பணத்தரகர் நிறுவனம்
28. கணனியின் மொனிற்றர் என்பது ஒரு
    1) வெளிச் செலுத்தும் பகுதி
    2) நினைவகம்
    3) கட்டுப்படுத்தும் பகுதி
    4) உட்செலுத்தும் கருவி
29. தகவலை சேர்த்து வைக்க பயன்படும் தட்டு
    1) சுட்டி 2) வன்தட்டு
    3) விண்டோஸ் 4) விசைப்பலகை
30. கணனியையும் தொலைபேசியையும் இணைப்பதற்கு பயன்படும் சாதனம்
    1) மோடம் 2) இணைய மென்பொருள்
    3) வன்தட்டு 4) விண்டோஸ்
31. நிறுவனங்களின் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு தேவையான வளங்களையும் கருமங்களை ஒன்றிணைத்தல்
    1) திட்டமிடுதல் 2) ஒழுங்கமைத்தல்
    3) செயற்படுத்தல் 4) கட்டுப்படுத்தல்
32. ஊழியர்களை தேர்ந்தெடுக்கும் முறையல்லாதது
    1) விண்ணப்பங்கள் மூலம்
    2) எழுத்துப் பரீட்சை மூலம்
    3) கவர்ச்சி மூலம்
    4) நேர்முகப்பரீட்சை மூலம்
33. கொள்வனவு 3,000 ரூபா காசுக்கணக்கு வரவு வைக்கப்பட்டு கொள்வனவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது இவ் வழு
    1) பக்கம் மாறி பதிதல் வழு
    2) விடுபாட்டு வழு
    3) இரட்டிப்பு வழு
    4) கோட்பாட்டு வழு
34. வருமானச் செலவுக் கணக்கு எவ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும்
    1) சேவை நோக்கம் கொண்ட நிறுவனம்
    2) இலாப நோக்கம் கொண்ட நிறுவனம்
    3) சேவையும் இலாப நோக்கம் கொண்ட நிறுவனம்
    4) காப்புறுதி நிறுவனம்
35. நுகர்வோர் சங்கம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான இழிவளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை
    1) 20நபர் 2) 15நபர்
    3) 30நபர் 4) 18நபர்

தொகுப்பு
மு.சிவப்பிரகாசம்
கிளி. அக்கராயன் மகா வித்தியாலயம்.

# தமிழ்மொழியும் இலக்கியமும்



தரம் :- 11

## பகுதி III

(1) பின்வரும் கூற்றுக்களின் பின்னால் வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. "மாருதி அன்னலாகில் நீ எனும் மாற்றம் பெற்றேன் ஆர் இனி என்னோடு ஒப்பார்?"………
   அ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
   ஆ) யாருக்கு கூறப்பட்டது?
   இ) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
   ஈ) இதில் மாருதி எனப்படுபவன் யார்? *(8 புள்ளி)*
2. "நானும் மணிமேகலைக்குத் துணையாகச் செல்வேன்"………..
   அ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
   ஆ) யாருக்கு கூறப்பட்டது?
   இ) மணிமேகலையோடு இக்கூற்றை கூறுபவர்கள் எங்கே சென்றார்?
   ஈ) இவர்கள் சென்ற இடத்தில் மணிமேகலையைத் தேரிலேற்ற வந்தவன் யார்?
3. "பெரியவர்களே உங்களுக்குள் என்ன வழக்கு?"
   அ) இங்கே பெரியவர்கள் இருவரும் யாவர்?
   ஆ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
   இ) இங்கு குறிப்பிடப்படும் வழக்கு யாது? *(8புள்ளி)*

(2) பின்வரும் பாடல்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி பாடலின் கீறிடப்பட்ட தொடரின் பொருட் சிறப்பை விளக்குக.

1. "நமக்கு முன்பிங்குணவிலை யாயிலும்
   இமக்கு லக் கொடி பாகர்க் இனியவர்
   தமக்கு நாம் இன் அடிசில் தகவுற
   அமைகு மாறெங்கனம் அணங்கே" என
2. ஆர்த்த சபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர்
   வார்த்தை பயினாயிரத் தொருவர் - பு,த்த மலர்த்
   தண்தாமரைத் திருவே தாதாகோ டிக்கு ஒருவர்
   உண்டாயின் உண்டென்று அறு.
3. வெறுவான வெளி மீது மழை வந்து சீறும்
   வெறிகொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்
   நெறி மாறு பட நூறு சுழி வந்து சூழும்
   நிலையான தரை நீரில் இலை போல் ஈடாடும்
   (3x8=24 *புள்ளி*)

(3) பின்வருவனவற்றுள் இரு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. அங்கதன் தூதுப் படலத்தின் துணையுடன் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   அ. இராமன் அங்கதனைத் தூதுவனாகத் தெரிந்ததன் நோக்கம்? *(6 புள்ளி)*
   ஆ. இராவணனிடம் அங்கதன் தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்தினான்? *(10 புள்ளி)*
2. 'மணிமேகலை' என்னும் கட்டுரைப் பகுதியை நினைவிற் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   அ. மணிமேகலையின் கையில் சேர்ந்த அமுதசுரபியின் சிறப்புக்கள் எவை?
   ஆ. மணிமேகலாத் தெய்வம் மணிமேகலைக்கு உபதேசித்த மூன்று மந்திரங்களும் எவை?
   இ. மாதவியும் மணிமேகலையும் இந்திர விழாவுக்குச் செல்லாதது ஏன்? *(16 புள்ளி)*
3. தேவகிருபையை நம்பி என்ற பாடத்தை ஆதாரமாகக் கொண்டு விடைதருக.
   அ. கரம்பன் செவஸ்தியார் கோயிலடிவாசிகளுக்கு அந்தோக் கிழவி எவ்வாறு அமைந்திருந்தாள்.
   ஆ. அந்தோக்கிழவியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு கதாசிரியர் வாசகர்க்குக் கூற முற்படுவதென்ன?
   இ. சங்கரப்பிள்ளை சந்தர்ப்பத்துக்குத் தகுந்த முடிவெடுப்பவர் என்பது இக்கதை மூலம் எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது.
4. இருட்டறை என்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.
   அ. சகீனாக்கிழவியின் வாழ்க்கைக்கு உடந்தையாக இருந்த அவளது மனத் துணிவென்ன?
   ஆ. இக்கதைமூலம் இஸ்லாமிய சமூக சம்பிரதாயங்கள் வெளிப்படுகின்றன. இரு உதாரணம் தருக.
   இ. "இருட்டுக்குள் இருட்டை அடக்கி குருட்டுத் தவம் புரிந்து கொண்டிருந்தது" இவ்வடியை விளக்குக.

கு. ரவிச்சந்திரன்,
யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு
*தெளிவான இலக்கும் சிந்தனையும் கொண்டவனே செயலாற்றல் மிக்கவனாவான்.*
-லூக்காஸ்

# நமது நோக்கு

## எதிர்பார்ப்புக்களுடன்.....!

இனிவரும் காலங்களில் பாரிய புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் யாழ்.மாவடடத்தின் அரச நிர்வாகக் கட்டமைப்பை அதற்கேற்ற வகையில் தயார்ப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பைச் சுமந்தவராக, யாழ். மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக செ.பத்மநாதன் பொறுப்பேற்றுள்ளார்.

ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் திட்டப் பணிப்பாளராகவும்,அரசாங்க அதிபராகவும் செயலாற்றியவர் என்ற ரீதியில் - அவரது சேவையை யாழ். மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் வரவேற்கின்றனர்.

கடந்த சில வருடங்களாகவே - யாழ்.மாவட்ட அரச நிர்வாகத்தில் காணக்கூடியதாக இருந்த சில நிர்வாகச் சிக்கல்களையும், திருப்தியற்ற செயற்பாடுகளையும் சீராக்கிக் கொண்டு அவர் தனது பயணத்தை ஆரம்பிக்க வேண்டியவராகவுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட பெருந்தொகைப்பணம் மக்களைச் சென்றடையாமல் போனாலும்- எழுந்தமானமாக, பொருத்தமற்ற வகையில் நடைபெற்ற பதவி நியமனங்களும் - யாழ்.அரச நிர்வாகத்தின் பேரில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சலிப்பையும் வெறுப்பையும் மாற்றும் பணியும் அவருக்குக் காத்திருக்கிறது.

யுத்தத்தால் பல வருடங்களாகவே மிகவும் பாதிப்படைந்துள்ள யாழ்.மாவட்டத்தினை மீளக் கட்டியெழுப்புவதற்கு பல வகையிலும் முயற்சிகளும், உதவிகளும் மேற்கொள்வதற்கான வழிவகைகள் உறுதியாகி வருகின்ற தருணத்தில் - யாழ். குடாநாட்டினது உடனடித் தேவைகளையும், நீண்ட இலக்குகளையும் ஒருசேரக் கையாள வேண் டிய அவசியம் இன்று எழுந்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து வாழும் மக்களை மீளக் குடியமர்த்தி, அவர்களது இயல்பு வாழ்க்கைக்கு வேண்டிய ஏற்பாடுகள் மக்களால் எதிர்பார்க்கப்படுகின்றன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.மண்ணின் சுய பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பவும், நவீன முறைகளை அறிமுகப்படுத்தி தொழிலாற்றலை அபிவிருத்தி செய்யவும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டியுள்ளது

அரசாங்க நிறுவனங்களினதும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் பணிகளை ஒருங்கிணைத்து- ஒத்திசைவான போக்கில் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதன் மூலமே-சமூகத்தின் தேவைகளை முழுமையாக நிவர்த்தி செய்ய முயற்சிக்கலாம்.

யாழ்ப்பாணத்தின் புவியியல் அமைப்புக்கு ஏற்ற வகையில்-காத்திரமான கலந்துரையாடல்களுடன் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.

அத்தகைய திட்டங்கள் - கண்காணிப்பும், மதிப்பீடும், பின்னூட்டமும் கொண்டவையாக தொடரப்படுவதன் மூலம் மக்களை உதவிகள் சென்றடைவது உறுதிப்படுத்தப்படும்.

குறுகிய காலத்தில் - பல அபிவிருத்தித் திட்டங்களை சம காலத்தில் முன்னெடுக்க வேண்டிய தேவையையும் யாழ்.மண் கொண்டிருக்கிறது.

யாழப்பாணத்திலிருந்து உருவான பட்டதாரிகளுட்பட பெருந்தொகை இளைய சமுதாயத்தினர் வேலைவாய்ப்பற்று வாடுகின்றனர். அவர்களுக்கான வேலைவாய்ப்புக்களுக்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இதைவிடவும் ஏராளம் எதிர்பார்ப்புக்களை யாழ்.சமூகம் சுமந்துள்ளது. இந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பணிகளில் புதிய அரச அதிபர் தீவிர ஆர்வம் காட்டுவார் என்ற நம்பிக்கையும் மக்களிடம் உள்ளது. இதற்கான பதில் அவரது செயற்பாடுகள் மூலமாக மக்களுக்கு கிடைக்கட்டும்.

# பருத்தித்துறையில் மருந்தகம் ; நீடித்து வந்த இழுபறி தீர்ந்தது!

(வடமராட்சி)

பருத்தித்துறை மத்திய மருந்தகத்திற்கு கட்டடம் அமைப்பதற்காக காணி பெறுவதில் இருந்த இழுபறிநிலை தற்போது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

மத்திய மருந்தகம் அமைப்பதற்காக பருத்தித்துறை நகரசபை இரண்டு காணிகளில் ஒரு காணியினை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தது.

நகரசபையால் வழங்கப்பட்ட தெங்கங்கிணற்றடிக்காணி, 3ஆம் குறுக்குத் தெருவிலுள்ளகாணி ஆகிய இரண்டு காணிகளில் ஒன்றை தெரிவு செய்வதில் சுகாதாரத் திணைக்கள அதிகாரியும் மேலதிக அரசாங்க அதிபரும் முரண்பட்டிருந்தனர். சுகாதாரத் திணைக்கள அதிகாரி தெரிவுசெய்த தென்னங் கிணற்றடிக் காணியில் மருந்தகம் அமைப்பதற்கு முடிவு செய்திருந்தவேளை நகர சபையால் வழங்கப்படவிருந்த காணி நகரசபைக்கு சொந்தமானதா தனியாருக்குச் சொந்மானதா என்ற பிரச்சினை எழவே மருந்தகம் கட்டுவதற்கான முயற்சியில் இழுபறிநிலை ஏற்பட்டது.

மருந்தகம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தாத நிலையில் மத்திய அரசுக்கு திரும்பிச் செல்வதைத் தடுப்பதற்காக 3ஆம் குறுக்குத் தெருவிலிருக்கின்ற நகரசபைக்குச் சொந்தமான மூன்று பரப்புக் காணியினைத் தருமாறு மருந்தகம் அமைக்கும் குழு கோரிக்கை விடுத்திருந்தது.

இதனை அடுத்து கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற நகரசபை விசேட கூட்டத்தில் 3ஆம் குறுக்குத் தெருவிலுள்ள காணியினை மருந்தகம் அமைப்பதற்கு வழங்குவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஆளுநரின் அங்கீகாரம் பெறுவது என்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. (23)

# நாகர் கோவிலிலிருந்து இடம் பெயர்ந்து கவனிப்பாரின்றி வாடும் மக்கள்

(வடமராட்சி)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் சமாதான பேச்சுக்கள் இடம் பெற்று வருகின்ற போதிலும் நாகர்கோவிலிலிருந்து இடம் பெயர்ந்த மக்களாகிய நாம் மீள சொந்த இடத்திற்கு செல்ல முடியாது முகாம்களில் அவல வாழ்க்கை நடாத்த வேண்டியுள்ளதாக அப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நாகர் கோவில் பகுதியில் இருந்து 1999ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தையடுத்து உடுத்த உடையுடன் உடைமைகளை விட்டு வெளியேறியிருந்தனர்.

நாளாந்த வருமானத்தையே நம்பி வாழும் நாம் சொந்த இடங்களில் இருந்து வெளியேறி முகாம்வாழ்க்கையை அனுபவித்து வருகின்ற போதிலும் சொந்த இடங்களுக்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்காது கவனிப்பார் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக கவலையுடன் குறிப்பிடுகின்றனர்.

இடம் பெயர்ந்த மக்கள் தற்போது தும்பளை இலட்சுமண தோட்ட முகாம், கற்கோவளம் இடம் பெயர்ந்தோர் முகாம், தும்பளை லூர்துமாதா கோவில் முகாம்களில் தங்கியுள்ளனர்.

வரமராட்சி கிழக்கில் முன்னரங்கக் காவலரண்கள் அமைந்துள்ள நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து மூன்று வருடங்களாகியும் சொந்த இடங்களை சென்று பார்க்கவோ கைவிட்டு வந்த உடமைகளை மீட்டுவரவோ இதுவரை அனுமதிக்கப்படவில்லை. இடம் பெயர்ந்த எம்மை மீள்க்குடியமர்த்த இதுவரை பாராளுமன்ற உறுப்பினர்களோ அமைச்சர்களோ, வேறு எந்த அமைப்புக்களுமோ இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என தமது ஆதங்கங்களை தெரிவித்தனர். (23)

# தகவல் பரிவர்த்தனையில் தன்னிகரில்லாத அஞ்சல் சேவை

விஞ்ஞான, தொழில் நுட்பத்தின் அதீத முன்னேற்றம் காரணமாக, பல்வேறு நவீன சாதனங்களின் மத்தியிலும் அஞ்சல் தகவல் பரிவர்த்தனையில் தன்னிகரில்லாத இடத்தினை வகிக்கின்றது என்றால் அது மிகையாகாது. இதற்கு முக்கிய காரணங்களாகப் பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.

1.அதி உச்ச இரகசியம் பேணப்படுதல்.

2.குறைந்த செலவில் அஞ்சற் செய்திகளை அனுப்ப முடிந்தமை.

3.உலகின் மூலை,முடுக்கு எல்லாம் அஞ்சற் சேவை வியாபித்துள்ளமை.

இப்படியான அஞ்சற் சேவையின் முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டே, சர்வதேச ரீதியில் தரமான அஞ்சற் சேவையினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சர்வதேச அஞ்சல் ஒன்றியம் ஏற்படுத்தப் பட்டது.

*சர்வதேச அஞ்சல் தினம் இன்று*

சர்வதேச ரீதியில் இயங்கும் பழைமை வாய்ந்த இவ் ஒன்றியம், சர்வதேசங்களின் ஒத்துழைப்பின் பலனாகவே இன்றும் தனது நோக்கை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.இதன் எண்ணக்கரு 1863இல் ஐக்கிய அமெரிக்காவில் அஞ்சல் அதிபர் நாயகமாகவும்,ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் மந்திரி சபையில் உறுப்பினராகவும் விளங்கிய மொன் கெமேரி பிளேயரின் எண்ணத்தில் உதித்ததின் பலனாக, பாரிஸ் நகரில் கூட்டப்பட்ட மாநாட்டில் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த பதினைந்து பிரதிநிதிகள் சந்தித்து, பரஸ்பர நம்பிக்கையுடன் கூடிய பொதுவான அமைப்பினை ஏற்படுத்துவதற்கு இணக்கங் கண்டனர். ஏறத்தாழ பதினொரு ஆண்டுகளின் பின் ஜேர்மன் நாட்டின் அஞ்சல் பணிப்பாளர் நாயகத்தின் பெரு முயற்சியினால் 1871ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி சுவிற்சலாந்து நாட்டின் பேர்ன் நகரில் கூட்டப்பட்ட மாநாட்டில், இருபத்திரண்டு நாடுகளின் பிரதிநிதிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அஞ்சல் பொது ஒன்றியம் உருவாக்கப்பட்டது. இப் பெயரானது 1878இல் நடைபெற்ற இரண்டாவது மாநாட்டில் சர்வதேச அஞ்சல் ஒன்றியம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

சேவையினை இயக்குவதற்குத் தேவையான மற்றைய அடிப்படைத் தத்துவமானது அஞ்சற் பொருட்களின் நியம நிறை விகிதத்திற்கேற்ப அஞ்சல் கட்டணத்தினை நிர்ணயம் செய்தல், 1875 தொடக்கம் 1971 வரையான காலப்பகுதியில் அஞ்சற் பொருட்களை அனுப்பும் மூல நிர்வாகங்களே பெறப்படும் கட்டணங்களை தமக்குரியதாக்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் விநியோகத்தினை மேற்கொள்ளும் அஞ்சல் நிர்வாகத்திற்கும் வேதனம் எதுவும் கிடைப்பதில்லை. ஆயினும் 1969இல் டோக்கியோ நாட்டில் இடம் பெற்ற மாநாட்டுத் தீர்மானம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதாவது, குறிப்பிட்ட ஒரு அஞ்சல் நிர்வாகம்(நாடு) இன்னொரு அஞ்சல் நிர்வாகத்திற்கு (வேறொரு நாட்டிற்கு) அனுப்பும் அஞ்சற் பொருட்களின் நிறைக்கும் அந் நாட்டிலிருந்து முதற் குறிப்பிட்ட நாட்டிற்கு அனுப்பப்படும் அஞ்சற் பொருட்களின் நிறைக்கும் உள்ள வித்தியாசம் கணக்கிடப்பட்டு கூடுதலான அஞ்சற் பொருட்களை அனுப்பிய நாடு, மற்றைய நாட்டிற்கு ஒன்றியத்தினால் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கிணங்க நட்ட ஈட்டுத் தொகையினை வழங்குதல் வேண்டும்.

அஞ்சற் பொருட்கள் என்ற பதம் அஞ்சல் அட்டைகள், வான் கடிதங்கள், அச்சடித்த விடயங்கள், கண்பார்வையற்றோருக்கான இலக்கியம், சிறிய பைக்கற்றுக்கள் என்பவற்றினை உள்ளடக்கியதாகும். ஒன்றியத்தின் அமைப்பு விதி இப் பொருட்களின் கட்டணவீதம், அதியுயர், அதிகுறைந்த நிறை, பருமன் அத்துடன் பதிவுக் கடிதச் சேவை, காப்புறுதிக் கடித சேவை, விமான மூலமான அஞ்சற் சேவை, விசேட பாதுகாப்புடன் அனுப்ப வேண்டிய பொருட்கள் சம்பந்தமாகவும் விதிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பொதுச்சபை, நிறைவேற்றுச் சபை, அஞ்சற் கல்விக்கான ஆலோசனைச் சபை, சர்வதேசப் பணியகம் ஆகியன ஒன்றியத்தின் முக்கிய பகுதிகள் ஆகும். ஒன்றியத்தின் ஆரம்பத்தில் இருந்து மத்திய அலுவலகம் சர்வதேசப் பணியகம் என்ற பெயரில் பேர்ன் நகரில் இயங்கி வருகின்றது. சர்வதேச அஞ்சல் ஒன்றியம், சர்வதேச அஞ்சற் சேவை தொடர்பான ஒருங்கிணைப்பு வெளியீடுகள், பிரசாரம் என்பன இதன் முக்கிய பணிகளாகும்.

அஞ்சல் முத்திரைகளை வெளியிடுதல், விற்பனை செய்தல் உறுப்பு நாடுகளின் சொந்த விவகாரம் ஆகும். அதனால் தான் முன்பு முத்திரை வெளியிடுதல் ஒன்றியத்துடன் தொடர்பற்ற விடயமாக இருந்த போதும் உறுப்பு நாடுகளின் நலனில் ஒன்றியம் அக்கறையுடன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. எப்படியோ அண்மைக் காலத்தில் இக் கொள்கையில் முத்திரைகள் ஒரு நாட்டின் கலாசாரம், சரித்திரம், கலை வளர்ச்சி என்பவற்றினைப் பிரதிபலிப்பதுடன் முத்திரை வரியினை ஈட்டிக் கொள்வதற்கும் பயன்படுத்தபட்டதன் காரணமாக சிறிது மாற்றம் தென்படத் தொடங்கியது.

சர்வதேச அஞ்சல் வலையமைப்பு மூலம் மிகவும் பின்தங்கிய கிராமங்கள் கூட அஞ்சல் சேவையினைப் பெறக்கூடியதாக உள்ளன. தற்போது உலகில் ஏறத்தாழ 670,000 நிரந்தர அஞ்சல் அலுவலகங்கள் இயங்குகின்றன. இவற்றில் ஆறு மில்லியன் பேர் வரையில் வேலைக் கமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் சர்வதேச ரீதியில் சராசரி 430,000 மில்லியன் அஞ்சற் பொருட்கள் வருடந்தோறும் பரிமாற்றப்படுகின்றன. இவ்வஞ்சல் அலுவலகங்கள் அஞ்சற் சேவையுடன் காசுக்கட்டளை, அஞ்சற் காசோலை, சேமிப்பு வங்கிக் கணக்கு, போன்ற சேவைகளையும் தேசிய, சர்வதேச ரீதியில் மேற்கொண்டுள்ளன.

இருபத்திரண்டு நாடுகளின் உறுப்புரிமையுடன் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றியமானது இன்று 89 நாடுகளின் உறுப்புரிமையைக் கொண்டுள்ளது. இலங்கை குடியேற்ற ஆட்சி முறையின் கீழ் 01.04.1877 இலும் பின்னர் 13.07.1949 இல் சுதந்திர நாடாகவும் ஒன்றியத்தில் இணைந்துள்ளது.

புராதன காலத்தில் அரசர்களிடையே தூதுவர் மூலம் செய்திப் பரிமாற்றங்கள் இடம் பெற்றதாக கூறப்பட்டபோதும் போர்த்துக்கேயர் ஆட்சியின் (1517-1640 ஒல்லாந்தர் ஆட்சியில் (1640-1794) ஆங்கிலேயர் ஆட்சியின் போதும் 1815 வரை அஞ்சற் சேவை நடைபெற்றதற்கான பதிவுக்குறிப்புக்கள் கிடைக்கக் கூடியதாக இல்லை. 1815 இல் முதன்முதலாக ஆறு அஞ்சல் அலுவலகங்கள் கொழும்பு, காலி, மாத்தறை, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டன. 1872.08.22 இல் முதன்முதலில் அஞ்சல் அட்டை அறிமுகமானது. 1893.02.01 இல் முதலாவது அஞ்சல் முத்திரை இலங்கை நாணயத்தில் வெளியிடப்பட்டது.

*-அம்பலவாணர் துரைசிங்கம்*
*அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*

# கலைவெளிப்பாட்டிலும் வாழ்விலும் நேர்மையானவனே மெய்க்கலைஞன்!

## விருந்தினர் பக்கம்

*கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஈழத்து நாடக உலகில் தனக்கெனத் தனிமுத்திரை பதித்துதுள்ளவர் - அவர் மூலம் பல துறை களிலும் வாழ்வில் பிரகாசம் பெற்றோர் பலர் உ ளர். ஆசிரியப் பணியிலும் சாதனை படைத்தவர். கலை யரசு சொர்ணலிங்கம் அவர்களால் 'கலைப்பேரரசு' என்று பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டவர் ஏ.ரி.பி. 'நமது ஈழநாடு' நாளிதழுடன் தனது அனுபவங்களைப் பகிர்கின்றார்*

**ஓர் நாடகக்கலைஞனுக்கு இருக்க வேண்டிய அதிமுக்கிய தகுதிகள் என்ன?**

அவன் நாடகக்கலைஞன் நடிப்புக கலையில் சிறப்புப்பெற்றிருந்தால் மாத்திரம் போதாது. அவனுக்கு ஒழுக்கம் மிகமிக அவசியமானது. பழைய கலைஞர்கள் ஒழுங்குமிக்க வாழ்க்கையைக் கொண்டிருந்தமையால் மக்களால் பெரிதும் கௌரவிக்கபட்டார்கள் ஒழுங்குமுறை (DICIPLINE) அவர்களால் பேணப்பட்டு வந்தது. இன்றைய கலைஞர்கள் பலரும் இத்தகைய தன்மை கொண்டவர்களாக இல்லை என்பது வேதனைக்குரிய விடயம். ஒழுக்கம் கைக்கொள்ளப்படாத கலைஞன் எத்தகைய சிறப்பு அம்சங்கள் பொருந்தியவனாக இருந்தாலும் "ஒரு குடம் பாலுக்கு ஒரு துளிவிஷம்" என்பது போல் அவனது வாழ்க்கை சூனியமாகி, மக்களால் அவன் வெறுத் தொதுக்கப்பட்டவனாகிவிடுவான்.

**நாடக உலகில் தாங்கள் பிரவேசித்து அரை நூற்றாண்டுக்கு மேலாகின்றது. தாங்கள் கதை வசன கர்த்தாவாக, நடிகனாக, இயக்குநராகப் புகழ் பெற்றிருக்கின்றீர்கள் தாங்கள் படைத்த ஆக்கங்களில் தங்களுக்குப் பெரும்புகழ் தந்ததும், முழுமையான திருப்தி தந்ததுமான படைப்பு என்றெதனைக் கருதுகின்றீர்கள்?**

1960 களில் எனதுகதை, வசனம், இயக்குதலில் உருவாகி மாவிடடபுரம் முத்தமிழ் கலாமன்றத்தால் மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசாமி கோவில் வீதியில் மேடையேற்றப்பட்ட 'நிறை குடம்' நாடகத்தை இந்த வகையில் குறிப்பிடலாம். இதில் கதாநாயகனாக நான் நடித்தேன். சரித்திரக் கதை வடிவிலமைந்த இந்நாடகத்தில் பிரபல கவிஞரும், தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருபவருமான வி.கந்தவனமும் முக்கிய பாத்திரமொன்றில் நடித்திருந்தார்.



கலைப்பேரரசு
ஏ.ரி.பொன்னுத்துரை

**தாங்கள் பல கல்லூரிகளில் ஆசிரியராகவும் பணிபுரிந்துள் ளீர்கள் இந்தவகையில் தங்களிடம் கல்வி பயின்றதுடன் நாடக, சினி மாத் துறையில் என்று எவராவது இருப்பின் அது பற்றிக் கூறுங்கள்?**

என்னிடம் கல்வி பயின்ற பலரும் பல்வேறு துறைகளிலும் இன்று பிரகாசித்துக் கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. நாடக, சினிமாத்துறை என்றெடுத்துக் கொண்டால் என்னிடம் காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்விபயின்று "பைலட் பிரேம்நாத்" படத்தில் சிவாஜி கணேசனுடன் இணைந்து (1977 இல்) நடித்து இன்று தமிழகத்தில் சினிமா நடிகனாக எழுத்தாளனாக, கவிஞராக கீர்த்தியுடன் உள்ள டாக்டர் சிலோன் விஜயேந்திரனைக் குறிப்பிடலாம்.

**சிலர் பல்வேறு துறைகளிலும் ஆற்றல் பெற்றிருந்தும் ஒரு துறையில் மாத்திரமே அவர்கள் இனங்காணப்படுகிறார்களே, ஏனிந்த நிலை?**

இதற்கு உதாரணமாக யோக சமாஜத்தின் கவியோகி சுத்தானந்த பாரதியைக் குறிப்பிடலாம். அவர் மிகச்சிறந்த புத்திஜீவி- பல்துறைப் பாண்டித்தியம் பெற்றவர். ஆயினும் அவர் தவக்கோலத்தில் சென்னை அடையாறில் நீண்ட காலமாக யோக சமாஜம் நடத்தி வந்ததால் அவரை ஆச்சிரமவாசியாக்கி முழுமையான துறவி என்ற வட்டத்திற்குள் வைத்து விட்டார்கள். அதனால் அப்பேரறிஞரின் படைப்புக்கள் பரந்துபட்டரீதியில் நிலைகொள்ள உரியவாய்ப்புக்கள் உருவாகவில்லை எனலாம். இவ்வாறு கூறுவதனால் அந்த மேதையின் சிறப்பு பிரகாசம் பெறவில்லை, மக்கள் மத்தியில் வியாபிக்கவில்லை என்று பொருளல்ல.

**மிகச்சிறந்த கலைஞர்கள் பலரும் தமது சிலபலவீனங்களால் காலப்போக்கில் மக்கள் மத்தியில் மதிப்பிழந்து அவர்கள் புகழ் மங்கி, மறக்கப்பட்டு விடுகிறார்களே அதற்கு எது காரணமென எண்ணுகின்றீர்கள்?**

இதற்கு உதாரணமாக தமிழக நடிகர்கள் சிலரை இங்கு குறிப்பிடலாம். பழம்பெரும் பாடகரும், கே.பி. சுந்தராம்பாளின் கணவருமான எஸ்.ஜி. கிட்டப்பாவை, ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர், கலைவாணர் ன. எஸ். கிருஷ்ணன் போன்றோரைக் குறிப்பிடலாம். கிட்டப்பா தகாதோர் நட்பினால் மதுவால் மதிப்பிழந்தார், சொத்திழந்தார். பாகவதர் மது, மாது என இரண்டினாலும் மதிப்பூறு அடைந்தார். கலைவாணர் மதுவினாலும் சொந்தப்படத்தயாரிப்பினாலும் வாழ்விழந்தார்.

**தங்களுக்குப் பிடித்த நடிகர், எழுத்தாளர், பாடகி, கவிஞர் எவரெவர்?**

எனக்கு மிகமிகப்பிடித்த நடிகர், நடிப்புக்கு இலக்கணம் வகுத்த சிவாஜிகணேசனே. பிறவிக கலைஞனான அவர் நடித்த 'வியட்நாம் வீடு' என்னை வெகுவாகக் கவர்ந்தது. அவரது நடிப்பாற்றலால் மெய்மறந்த பாடங்கள் பலவுண்டு. நம் நாட்டுக் கலைஞர்களான மதிப்புக்குரிய கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வி.வி.வைரமுத்து ஆகியோரையும் இவ்வகையில் சொல்லலாம். கவிஞர்களில் இணையற்றகவிஞர் கண்ணதாசனை எனக்கு மிகவும் பிடிக்கும். வாலியின் பாடல்களும் மிகுந்த கருத்தாழம் உள்ளவையே.

பாடகிகளில் 'இசையரசி' எம். எஸ். சுப்புலஷ்மியைப் பிடிக்கும் எழுத்தாளர்களில் வல்லிக் கண்ணனை நான் பெரிதும் மதிக்கிறேன்.

நேர்காணல் -ஸ்ரீ

## சின்னஞ் சிறு செய்திகள்

### உலகத் தபால் தினம் இன்று

(அரியாலை)

இன்று உலகத் தபால் தினத்தையொட்டி விஷேட நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில், பிரதித் தபால் மா அதிபர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் அரச, வங்கி உயரதிகாரிகளும் கலந்து கொள்ள உள்ளனர்.

உலகத் தபால் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் அஞ்சல் திணைக்களத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே அறிவை மேம்படுத்தும் பொருட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் இந் நிகழ்வில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (55)

### சணல் செய்கையில் விவசாயிகள்ஆர்வம்

புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான் பிரதேசத்து விவசாயிகள் சணல் செய்கையில் கூடிய ஆர்வம் காட்டுவதனைக் காணமுடிகின்றது.

தற்பொழுது யாழ்.கண்டி வீதி பாதை திறக்கப்பட்டு, வன்னியிலிருந்து லொறிகளில் எருக்கள் வருகின்றபோதிலும், ஒரு லொறி எரு 10,000 ரூபா முதல் 13,000 ரூபா வரை விற்கப்படுவதனாலேயே, விவசாயிகள் பசுந்தாள் பசளையான சணலை விரும்பிப் பயிரிடுகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.(83)

### நிமலராஜன் அஞ்சலிக் கூட்டம்

(நெல்லியடி)

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளராக இருந்து படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இரண்டாவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வட இலங்கை பத்திரிகையாளர் சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.(13)

### ஆசிரியருக்கு இலகு கடனில் தொலைக்காட்சி

(நெல்லியடி)

உடுப்பிட்டி அமெரிக்கமிசன் பாடசாலை ஆசிரியர்களுக்கு, உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் முதலாம் திகதி தொடக்கம் இலகு கடன் அடிப்படையில் தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்கி வருகின்றது.

ஆசிரியர்கள் மத்தியில் இருந்து இத் திட்டத்திற்குப் பெரு வரவேற்பு கிடைத்துள்ளது. 12மாத தவணைக் கட்டணங்களைக் கொண்டதாக இத்திட்டம் அறிமுகப்படுத்தபபட்டுள்ளதாக உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (13)

## மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில்

# கிராம அலுவலர்களுக்குப் பற்றாக்குறை மீள்குடியமர்வுப் பணிகள் தாமதம்!

(வடமராட்சி- கிழக்கு)

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர் பதவிக்கான வெற்றிடங்கள் இருப்பதால் மீள்குடியமர்வுப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள முடியாதிருப்பதாகத் தெரியவருகின்றது.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 18 கிராம அலுவலர் பிரிவுகள் இருக்கின்ற போதும் ஒன்பது கிராம அலுவலர்களே பணியில் உள்ளனர். ஏனைய ஒன்பது பிரிவுகளிலும் கிராம அலுவலராக எவரும் நியமிக்கப்படாததால், தற்போது பணியில் உள்ள கிராம அலுவலர்கள் மேலதிகமாக ஒவ்வொரு பிரிவில் பதில் கடமையாற்றி வருகின்றனர்.

இந்நிலையினால் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கான புனரமைப்பு உதவிகளை விரைவுபடுத்த முடியாதிருப்பதாகக் கூறப்படுகின்றது.

# நீதிமன்றச் சுருக்கெழுத்தாளர் தடைதாண்டல் பரீட்சை விண்ணப்பம்

(மானிப்பாய்)

இலங்கை நீதிமன்றச் சுருக்கெழுத்தாளர் சேவையின் 2ஆம் தர அலுவலர்களுக்கான 1 ஆம், 2 ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான விண்ணப்பம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது.

1 ஆம், 2 ஆம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடாத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் தத்தமது திணைக்களத் தலைவர்கள் மூலமாக எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பெலவத்த, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் 'பெயர்' 'குறியீட்டு இலக்கம்' என்பவற்றை குறித்து அனுப்பும்படியும் கோரப்பட்டுள்ளது. (100)

சுவேந்திரா குளிர்பான சோலை

சகலவிதமான குளிர்பானங்களும், சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீம் வகைளும், சிற்றுண்டி வகைகளும் உடனுக்குடன் சுவைத்துக் கொள்ளலாம்.

சுவேந்திரா குளிர்பான சோலை
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு (005)

உங்கள் நாவுக்கு சுவையூட்டும் எமது தயாரிப்புகள்

மாம்பழ சட்னி மோர்மிளகாய் கோடியல்
தேசி ஊறுகாய் நெல்லிக்கிறஷ்
Jam (Mix fruit, Mango, WoodApple, Pine apple, Tomato)



இயற்கையான பழங்களிலிருந்து அதி உன்னதமாக தயாரிக்கப்பட்டது
இரசாயனக் கலவையற்றது

IRRAIN
Liberté Egalité Fraternité
RÉPUBLIQUE FRANÇAISE
ACTION FAIM

உங்கள் அனைத்து தேவைகளுக்கும்
ஐசுபி தொழிலகம்,
மானிப்பாய் வீதி, உடுவில்

தலைமையகம்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்,
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

(சி-039)

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்!

(நேற்றையதொடர்ச்சி)

## சித்திரம்

...தசாமி ஆறுமுகதாஸ் (வவுனியா),செயது முகமட முகமட் கன்பியஸ் (கல்பிட்டிய), கனகராஜா தமிழினி (வவுனியா), ஜெகநாதன் திவாகினி ஜெகதாலினி (புத்தளம்), வெற்றிவேல் திருமகள் (மன்னார்), இலமொன் குறுஸ் வலான்கியு சுசித்திரா (மன்னார்), பெனடிட் கிருஷாந்தி கேமஉதயானி (மன்னார்), மடர் மொகதீன் ஹமீதியா (புத்தளம்), ராஜேந்திரன் பத்மபிரியா டெகி யோவிற்றா, சின்னத்துரை ஜெகதீபன் (கரவெட்டி), அந்தோணிப்பிள்ளை ஜெபநேசன் (யாழ்ப்பாணம்), கார்த்திகேசன் துவாரகன் (மாவிட்டபுரம்), வருநாநந்தன் சற்சொரூபன் (கோப்பாய்), சிவசோதி சுதர்சினி (சாவகச்சேரி), செல்வராசா செல்வரமணன் (புலோலி), செல்லத்துரை ஜணந்தன் (சுன்னாகம), மார்க்கண்டு ச...பன் (அளவெட்டி), ஆரோக்கிய...தாஸ் செல்வதர்சினி (கர...), தவராசா கார்த்தீபன் (கொக்குவில்), சிவராசா காண்டீபன் (ஏழாலை), வேகவனன் சுன்ராஜ் (யாழ்ப்பாணம்), ராமச்சந்திரன் ரேணுகா (யாழ்ப்பாணம்), கோமகன் யூட் சுதர்சன் (யாழ்ப்பாணம்), கணபதிப்பிள்ளை ஜெயந்தன் (அல்வாய்), மகாலிங்கம் தவக்குமார் (சாவகச்சேரி), வீரகத்தி சித்திரா (ஊர்காவற்துறை), ராஜரட்ணம் சோபா (உரும்பிராய்), பற்றிக் அல்பேட் ஜஸ்வின் சுதர்சன் (யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் ரதீஸ்வரன் (தாளையடி), கமலசேகரம் டயானா (ஊர்காவற்துறை), ஒலிவர் ஞனராஜா ஜெயதீபா (மானிப்பாய்),

## விஞ்ஞானம்

சுகந்தினி விசுவலிங்கம் (கிளிநொச்சி), மாயன் விஜிந்தன் (கிளிநொச்சி), திரிலோகமூர்த்தி ரமணன் (கிளிநொச்சி), அழகன் விஜிதா (ஒட்டிசுட்டான்), செல்வராஜா பிரதீபன் (கிளிநொச்சி), கனகசபை கலையழகன் (முள்ளியவளை), மயில்வாகனம் நவஜீவா (மட்டக்களப்பு), சிவராஜா தேவராஜா (இளவாலை), பெரியதம்பி திவாகரன் (அக்கரைப்பற்று), சண்முகம் கிருபாகரன் (சாமென்துறை), கதிரவேற்பிள்ளை குமணன் (அரியம்பதி), ஜெயபாலன் ஜஸ்மினி (மட்டக்களப்பு), நடேசன் நிருபா (கல்லாறு), பேரின்பமூர்த்தி நீருஜா (அக்கரைப்பற்று), இராஜநாயகம் இராஜதனுஜா (காரைதீவு - 1), ஜஸ்மில் முகமட் சொவ்வி (கல்முனை), இதுரூஸ் முகமட் றியாஸ் (அம்பாறை), சீனித்தம்பி விஜயதரன் (மட்டக்களப்பு), கமீட் லபி முகமட் முகாஜ்ர் (ஏறாவூர்), சாரங் கபாணி உதயனன் (மட்டக்களப்பு), சிவலிங்கம் பிரதீபன் (யாழ்ப்பாணம்), செல்லநாயகம் சிறீதரன் (யாழ்ப்பாணம்), பரமேஸ்வரநாதன் ஜசீலா (கோண்டாவில்), சிவதர்சினி திருநாவுக்கரசு (சாவகச்சேரி), மகாதேவா றாதிகா (யாழ்ப்பாணம்), தங்கராஜா கிருஷாந்தி (புலோலி), தர்மலிங்கம் அறிவரசி (சுன்னாகம்), சிவயாழினி பாலசிங்கம் (ஏழாலை), திருநாவுக்கரசு தர்சினி (யாழ்ப்பாணம்), அருணாசலம் துர்க்கா (யாழ்ப்பாணம்), இராஜலிங்கம் கன்னியகுமாரி (சுன்னாகம்), கதிர் காமநாதன் இராதிகா (கரவெட்டி), லோறன்ஸ் கிறிஸ்ரி நிலானி (ஆனைக்கோட்டை), சின்னராஜா அனஸ்ரிகா (மானிப்பாய்), நடராஜா தர்மினி (அச்சுவேலி), சிவகுருநாதன் லிசாந்தி (நல்லூர்), சிறீரஞ்சினி சண்முகராஜா (வவுனியா), சிவலிங்கநாதன் கோசலா (வவுனியா), ஞானசேகரம் இரவிலோ (கிளிநொச்சி ... வவுனியா), செல்லப்பா ஞானசெல்வி (வவுனியா), சூசனி வாஸ் விஜிலியா (திருகோணமலை), சிந்துஜா மகாலிங்கம் (வவுனியா), பேரின்பராஜா ஜெயரஞ்சினி (கல்முனை), தம்பிராஜா லக்ஸ்மனராஜினி (மட்டக்களப்பு), சிவபாதம் ஜெயந்தா (அரியம்பதி-1), துரைராஜா சதீஸ்வரன் (வவுனியா), சாகுள் கமீட் அப்துல் மலிக் (புத்தளம்), இமானுவேல் கிறிஸ்ரி ஜெயசீலன் (வவுனியா), நிதிலினி செந்தில்ராஜா (வவுனியா), பாலச்சந்திரன் பாலமதி (வவுனியா), சுப்பிரமணியம் வினோதினி (வவுனியா), சுப்பிரமணியம் மனோஜா (பொறல்ல), துரைராஜா கார்த்திகா (மவுண்டலவனிய), சந்திரசேகரம் நிரேஸ் (வவுனியா), ஆரணி சிவஞானசெல்வம் (வட்டுக்கோட்டை), சிவகுமாரன் அபிரா (யாழ்ப்பாணம்), அபிராமி கணகநேசன் (சங்கானை), சின்னத்துரை சிந்துஜா (உடுப்பிட்டி), விஜயரட்ணம் ஜெயகரி (யாழ்ப்பாணம்), செல்லத்துரை ஜெனிஸ்ரிலா (சுன்னாகம்), கணேசன் அம்பிகா அபிராமி (பருத்தித்துறை), துளசி கந்தசாமி (நீர்வேலி), பற்குணராஜா சுபாஸினி (யாழ்ப்பாணம்), சுவாமிநாதன் டெனிசியா (கரவெட்டி), கந்தையா பிரதீபா (யாழ்ப்பாணம்), வல்லிபுரம் தர்சினி (காரைநகர்), தனபாலசிங்கம் ஜெயரூபி (நீர் வேலி), அரசரட்ணம் ரேணுகா (சுன் னாகம்), காதராஜா மேகலா (நீர்வேலி), இராஜேந்திரன் மகேந்தி (கொக்குவில்), புலேந்திர ராஜா அன்ரன் வூல்சிண்ட் (பண்டத் தரிப்பு), கதிரவேலு அருட்செல்வம் (உடுப்பிட்டி), சச்சிதானந்தம் சிவசங்கர் (இணுவில்), சிவசுப்பிர மணியம் சிவகணேசன் (மானிப்பாய்), கந்தசாமி எழில் முதல்வன் (வரணி), கந்தராஜா கங்காதரன் (எழுதுமட்டுவாள்), இராஜி இரவிராஜ் (சாவகச்சேரி), தங்கரட்ணம் ஜெயக்குமார் (நல்லூர்), சொர்ணலிங்கம் தேவலிங்கம் (கோண்டாவில்), யோகராஜா நந்தரூபன் (வேலனை-4), பாலசிங்கம் கிசோக்குமார் (யாழ்ப்பாணம்), நாகேந்திரம் நயனா (கரணவாய்), கந்தையா நிரூபன் (கரவெட்டி), தேவருள்ராஜா துளசிதா (கொக்குவில்), ரேணுகா கந்தசாமி (அச்சுவேலி), சர்மிலா நாகலிங்கம் (கோண்டாவில), கிருஜா மகேந்திரம் (வட்டுக்கோட்டை), மனோஜா மனோகரன் (உடுப்பிட்டி), கீதா ஜெய ராஜசிங்கம் (கோண்டாவில்), சிவபாதசுந்தரம் சுதாஜினி (கந்தரோடை),

## நாடகமும் அரங்கியலும்

அருளம்பலம் பிரபாகரன் (முள்ளியவளை), ஏ.சிவபாலன் (பரந்தன்), நாகதாசன் சிவதாசன் (கிளிநொச்சி), முருகேசு கௌசினி (மல்லாவி), தேவதாஸ் ஊழியன் (முல்லைத்தீவு), நாகராஜா தாரணி (கிளிநொச்சி), கமலவேணி ராஜன் (முள்ளியவளை), சிவசுப்பிரமணியம் திவாகர் (கிளிநொச்சி), க...ளிதாஸ் அன்ரனிற்றா (மட்டக்களப்பு), அனதாசியா அரோக்கியநாதன் (மட்டக்களப்பு), இராஜநாயகம் அனிற்றா நிறாசினி (மட்டக்களப்பு), சவரி அருளாநந்தம் வினோஜினி (மட்டக்களப்பு), சங்கரப்பிள்ளை பத்மராஜா (கோண்டாவில்), ஐயம்பிள்ளை சிவலோகநாதன் (தெல்லிப்பளை), ஞானமூர்த்தி திரணன் (அளவெட்டி), மகேந்திரன் செல்வேந்திரன் (நீர்வேலி), யோசப் யோன் மதுரன் (சண்டிலிப்பாய்), கணேஸ் கலாயிணி (மானிப்பாய்), சின்னத்தம்பி சுகந்தினி( சுன்னாகம்), சௌந்தரநாயகம் அல்பேற் றீகன் (யாழ்ப்பாணம்), கந்தையா சுவமிநாதன் (புத்தூர்), பரமநாதன் விஜிந்தன் (உடுவில்), உதய குமார் சசிக்குமார் (மல்லாகம்), உசா பொன்னம்பலம் (அளவெட்டி), கணேசலிங்கம் பகீரதி (உரும்பிராய்), குணரட்ணம் சபேசினி (சுன்னாகம்), போலினி நிரஞ்சினி (மானிப்பாய்), கந்தசாமி உதிஸ்ரவன் (உரும்பிராய்), கந்தசாமி ஆனந்தபிரபு (உரும்பிராய்), சிவலிங்கம் இரமணன் (அச்சுவேலி), மகேஸ்வரன் கஜேந்திரா (நல்லூர்), ஏரம்பு நந்தகுமார் (மானிப்பாய்), கிருஸ்ணராஜா கஜந்தன் (சுன்னாகம்), மகாதேவன் திவாகர் (யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் கமலதாஸ் (இணுவில்)

( நாளை தொடரும்)


யாழ்.நகரில் நவராத்திரி, தீபாவளியை முன்னிட்டு

DIALOG G.S.Mஇன் விசேட விலைக் குறைப்பு

DIALOG G.S.M அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு மாத நிறைவின் நெகிழ்ச்சியில் நாம் வழங்கும் விசேட விலைச் சலுகை

வருகின்ற 9.10.2002 ல் இருந்து வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு குறிப்பிட்ட ஒரு சில வாரங்களுக்கு மட்டும் இவ் வாய்ப்புள்ளது

| | பழையவிலை | புதியவிலை |
|---|---|---|
| ALCATEL | 12950/- | 12425/- |
| SAGEM | 12950/- | 11950/- |



புதிதாய் நீங்கள் ஒன்றை வாங்கும் போதும், குறைந்த விலை பெற்ற அதிஷ்டசாலியாகிறீர்கள் மேலும் எமது சேவை 3.10.2002 இலிருந்து பருத்தித்துறை, கோப்பாய்,அச்சுவேலி,ஆவரங்கால்,கைதடி,வரையும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. தற்போது சாவகச்சேரியில் புதிய தொலைத் தொடர்புகோபுரம் அமைக்கப்பட்டு வருவதால் குடாநாடு முழுவதுமே DIALOG G.S.M இன் சேவை உங்களை வந்தடைகின்றது. எனவே நீங்களும் உலக வலையமைப்போடு ஒன்றிணையுங்கள்.

DIALOG G.S.M உங்கள் கைகளில் இருந்தால்
இந்த உலகம் முழுவதும் இனி உங்களருகில்

**வேறு இடங்களில் வாங்கப்படும் DIALOG G.S.M இன் இணைப்புகள் துண்டிக்கப்படும்**

எமது ஏக விநியோகஸ்தர்கள்

தலைமைப்பணிமனை

1 THE PHONE SHOP
இல.204, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:0777-110111

2 THE PHONE SHOP
பலாலி வீதி
திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.
தொலைபேசி இல:0777-110111

3 THE PHONE SHOP
காங்கேசன் துறை வீதி,
சுன்னாகம்
தொலைபேசி இல:021-2223817



4 THE PHONE SHOP
பிரதான வீதி,
நெல்லியடி.
தொலைபேசி இல:021-2263267

5 THE PHONE SHOP
கைலாசபிள்ளையார் கோயில்,
நல்லூர்.
தொலைபேசி இல:021-2263267

6 THE PHONE SHOP
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்
தொலைபேசி இல:021-2223817


## இன்றைய நாள் இனிய நாள்

09-10-2002 புதன்கிழமை

**மேடம்:-** செய்தொழில் மேன்மை,பணவரவு, அலங்காரப் பிரியம்,பெண்கள் மகிழ்ச்சி, ஏகாந்த நிலை,கல்வி முன்னோற்றம்.

**இடபம்:-** பணவரவு,குடும்ப மனஸ்தாபம், உடல் அழகில் குறை, வாகனப்பலன்,பிள்ளைகளால் கவலை, கல்வி முன்னேற்றம்.

**மிதுனம்:-** மனதில் தாழ்ந்த நிலை, புத்திரர் தேக சுகக்குறைவு, வயிற்றில் சுகயீனம், எடுத்த காரியத்தடை, அலைச்சல், கல்விமுன்னேற்றம்.

**கர்க்கடகம்:-** மாதா சுகயீனம், வீட்டில் திருத்த வேலை, உறவினர் வருகை அயலில் உறவு பேணப்படல் வேண்டும், கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**சிங்கம்:-** தேகசுகக்குறைவு, தொழில் முன்னேற்றம் மகிழ்ச்சி பணவரவு, வீட்டில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம்.

**கன்னி:-** விண் அலைச்சல், காயமேற்படுதல், வரவுக்கேற்ற செலவு, குடும்ப அமைதி, கல்வி முன்னேற்றம்

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்:-** பண வரவு, இன சனக் கொண்டாட்டம்,மகிழ்ச்சி, இனசன உறவு வலுத்தல், கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**விருச்சிகம்:-** பொருள் நட்டம், சமூகத்தில் மதிப்பு, மகிழ்ச்சி விருந்துணர்வு, தேகசுகம் நன்று, கல்வி முன்னேற்றம்

**தனு :-** நண்பர் உறவு, மனமகிழ்ச்சி, தேய்வ தரிசனம், அறிவுடையோர் உறவு, கல்வி முன்னேற்றம்.

**மகரம்:-** தொழில் முன்னேற்றம், உடல்பெலயீனம் பித்த ரோகம், அவமானம்,கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**கும்பம்:-** எடுத்த காரியம் வெற்றி, தானதருமங்கள், காயம் ஏற்படுதல், வயிற்றில் ரோகம், கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**மீனம் :-** திடீர் பயம், பணவரவு மந்தம், தேகசுகக்குறைவு, வயிற்றில் நோய், கல்வியில் ஊக்கம் வேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜப்பானியக் குழு இன்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம் )

ஜப்பானிய தூதுக்குழு ஒன்று இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறது.

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக நிலமைகளை ஆராய்வதற்காகவே இக்குழுவினர் யாழ்ப்பாணம் விஜயம் செய்கின்றனர்

இக்குழுவினர் இன்று காலை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன மற்றும் செயலக உயர் அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளனர். அத்துடன மாகாண, வலயகல்விப் பணிப்பாளர்களையும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளனர்

தொடர்ந்து இக்குழுவினர் யாழ். போதனா மருத்துவமனை, [illegible]லிப்பளை வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதர வைத்தியசாலை [illegible] வற்றுக்கும் சென்று நிலைமைகளைப் பார்வையிடவுள்ளனர்.

(க-15)

# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்தியில் இவ்வலுவலகம் இன்று காலை 10 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நாடாவைவெட்டி அலுவலகத்தை திறந்து வைப்பார். யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன் பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து வைப்பார். விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உட்படப் பலர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

(92)

## கைதிகள் இரத்தவாந்தி

(கொழும்பு)

களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் 65 பேர் நேற்று இரத்த வாந்தி எடுத்ததாக தெரிவிககப்படுகிறது. இவர்கள் தமக்குச் சிகிச்சை அளிக்கப்படுவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை கைதிகளில் சிலர் கோமா நிலையை அடையும் ஆபத்து இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## இரு புலிப்போராளிகளும் பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

முள்ளிப்பொத்தானையில் கைது செய்யப்பட்ட இரண்டு விடுதலைப்புலிகள் உறுப்பினர்களுக்கும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது. பிணை மனு கோரி சட்டத்தரணி புவிதரன் செய்த மனுத்தாக்கலைத் தொடர்ந்து மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நீதிபதிகளான இராஜா பெர்ணாண்டோ, ஈ.ஏ.எதிரிசூரிய ஆகியோர் இணைந்து இவ் அனுமதியை வழங்கியுள்ளனர்.

25,000 ரூபா ரொக்கப் பிணையிலும், இரண்டு பேரின் சரீரப் பிணையிலும் இரண்டு புலிகள் உறுப்பினர்களையும் பிணையில் விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## அத்துமீறி மீன்பிடித்த 6 இந்திய மீனவர் கைது

(வவுனியா)

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த ஆறு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஆறு மீனவர்களும் நேற்று முன்தினம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிசாரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின்னர் நேற்றுக்காலை மன்னார் நீதிமன்றத்தில் பொலிசாரினால் ஆஜர் செய்யப்பட்டனர்.

தற்போது இவர்கள் மீண்டும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட ஆறு மீனவர்களின் பெயர் விபரம் வருமாறு-

பூ.ஆரோக்கியநாதன் ( வயது 28), எஸ்.ஏ. அந்தோனி செபஸ்தியன் (வயது 24), அ. அனந்தராஜா (வயது 31) ஆரோக்கியநாதன் அருள்ராஜ் (வயது 24), தி.ஜெயசுதன் (வயது 22), ம.செல்வம் (வயது 32) ஆகியோரே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் அண்மைக் காலமாக வடகிழக்கு கடற்பரப்[illegible] அத்துமீறி மீன்பிடித்து வருவது[illegible]

- இது விடயம் தொடர்[illegible] அரசாங்கத்திற்கும் கடற்படைக்[illegible] புலிகள் தரப்பிலிருந்து எடுத்துக் கூறப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அரசின் தனியார் மயமாக்கலை எதிர்த்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்புக் கோட்டையிலுள்ள மக்கள் வங்கிக்கும் மின்சாரசபைக்கும் முன்பாக பன்னிரண்டு கட்சிகள், எண்பது தொழிற்சங்கங்கள் ஆகியன இணைந்து அரசின் தனியார் மயமாக்கலை எதிர்த்து நேற்று ஒன்று கூடினர்.

அங்கிருந்து ஆர்ப்பாட்டப் பேரணியாக கோட்டை ரயில் நிலையத்தை அடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசின் தாராள மயப்படுத்தல் கொள்கைக்கு எதிராக கோஷங்களை எழுப்பிய வண்ணமிருந்தனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ- அரசாங்கம் தனியார் மயமாக்கலைக் கைவிட்டு நட்டமடைந்த நிறுவனங் களை மீட்டு எடுக்கவேண்டும் என்றார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தனியார் மயமாக்கல் தீர்வு அல்ல என்றும் அவர் கூறினார்.

ஏனைய இடதுசாரிக்கட்சித் தலைவர்களுடன் இணைந்து வீமல் வீரவன்ச, பேரியல் அஷ்ரப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆனால் கருத்து முரண்பாடு காரணமாக சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரட்ண பேர ணிக்குச் சமுகம் தரவில்லை.

## முஸ்லிம் காங்கிரஸ் 2எம்.பிக்கள் வெளிநடப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு அரசு என்ன தீர்வை வழங்கவுள்ளது என்பது பற்றி தெளிவுபடுத்தவில்லை எனக் கூறி முஸ்லிம் காங்கிரசின் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

வாழைச்சேனை, மூதூர் பகுதி வன்முறைகளில் பாதிப்புற்ற முஸ்லிம்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்க தவறிவிட்டதாகவும் எச்.எம். எம்ஹரிஸ் மற்றும் அன்வர் இஸ்மாயில் ஆகிய இரு எம்.பிகளும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இந்த எம்.பிகளை சந்திக்க நேற்று பிரதமர் ரணில் அழைப்பு விடுத்த போதும் அவர்கள் அதற்கு மறுத்துவிட்டனர். எனினும் இவர்கள் இன்று பிரதமரைச் சந்திக்கலாம் எனத் தெரியவருகிறது.

## நெடுந்தீவில் கண்காணிப்புக்குழு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்குப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நேற்று விஜயம் செய்தனர். அங்கு அவர்கள் பொதுமக்களைச் சந்தித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலை 10.45 மணிக்கு கடற்படைப்படகில் இக்குழுவினர் நெடுந்தீவு சென்றனர். குழுவில் மூவர் அடங்கியிருந்தனர். இக்குழுவினர் அங்கு எரிக்கப்பட்ட ஈ.பி.டி.பி அலுவலகத்தையும் பார்வையிட்டனர். மதியம் இவர்கள் நெடுந்தீவிலிருந்து புறப்பட்டனர். (112)

## வவுனியா மறியல்....

ஆட்டோக்கள் விசேட அதிரடிப் படையினரால் சேதமாக்கப் பட்டன. சில பொதுமக்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

அப்பகுதியில் இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட முறுகலையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வில்பிரட் மகாநாயக்க அப்பகுதிக்கு வந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தார்.

மறியல் செய்த பொதுமக்களால் வீதியில் ரயர்கள் போட்டு எரிக்கப் பட்டன. பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் தீயை அணைத்தனர்.

இதேவேளை குருமண்காட்டுச் சந்தியில் மறியலில் ஈடுபட்ட மக்களை இராணுவத்தினர் வாகனத்தில் வந்து மோத முற்பட்டனர். எனினும் வாகனம் மோதவில்லை.

12 மணியளவில் மறியல் போராட்டம் முடிந்ததும் நான்கு பக்கத்திலிருந்தும் பேரணிகள் புறப்பட்டு வவுனியா செயலகத்தை சென்றடைந்தன. முடிவில் மேலதிக அரச அதிபர் இரகுநாதபிள்ளையிடம், வவுனியா வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சதாசிவம்குலதேவராஜா மகஜர் கையளித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்ட மகஜரின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சர், வவுனியா அரச அதிபர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, பிரதிப் பொலிஸ்மா அதிபர், இராணுவக் கட்டளை அதிகாரி ஆகியோருக்கு அனுப்பப்பட்டன.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கான பிரதி வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் மேலவனிடம் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜரில் அரசாங்கம் உடனடியாக அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் எனவும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகளை அரசாங்கம் புறக்கணித்தால் தொடர்ச்சியான வெகுஜனப்போராட்டங்கள் நடத்தப் படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்று நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தில் பெருந்தொகையான மக்களும், மாணவர்களும் பங்கு பற்றியிருந்தனர். அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## இரவில்....

இவ்வேளை மேலும் சில படையினர் இப்பகுதிக்கு வந்து மக்கள் மீது தாக்குதல் நடத்தி பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட அந்த இராணுவ சார்ஜன்ட்டை விடுவிக்குமாறு மிரட்டினர். எனினும் மக்கள் அதற்கு இணங்க மறுத்துவிட்டனர். இதன்பின் இராணுவ அதிகாரி ஒருவரும் அங்கு [illegible] மக்களுக்குத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி குறிப்பிட்ட இராணுவ சார்ஜன்ட்டை விடுவிக்குமாறு கேட்டார்.

இதைத் தொடர்ந்து மக்கள் அந்த இராணுவ சார்ஜன்ட்டை விடுவிக்கவே இராணுவப் பொலிஸார் அவரை விலங்கிட்டு அழைத்துச் சென்றனர். குறிப்பிட்ட நபர் மொனராகலையைச் சேர்ந்த சார்ஜன்ட் விஜயசுந்தர (வயது 29) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நடந்த சம்பவங்கள் குறித்து பொதுமக்களிடம் கேட்டறிந்தனர். இச் சம்பவங்கள் பற்றி வெளியில் தெரியவந்தால் சிலரைக் கைதுசெய்யப்போவதாகவும் படையினர் சிலர் மிரட்டி விட்டுச் சென்றுள்ளதாக பொதுமக்கள் தரப்பில் அப்போது தெரிவிக்கப்பட்டது. (95,36,37)

## புனரமைப்பில் நெருங்கி....

சூழ்நிலையில் வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் ஜப்பான் பாரிய பங்களிப்பை வழங்கக் காத்திருக்கிறது என்றும் அவ்வுதவி எவ்வாறு அமையலாம் என்பது பற்றியும் எந்தத் துறைகளில் தாம் கூடுதலான பங்களிப்பை நல்க முடியும் என்பது பற்றியும் பேச்சுக்களில் ஆராயப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அபிவிருத்தி, பொருளாதாரம் சார்ந்த துறைகளில் ஒத்துழைப் போடு செயற்படும் ஆரோக்கிய சூழ்நிலை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உற்சாத்தை அளிக்கிறது என்றும்

வடக்கு-கிழக்கின் பொருளாதாரக் கட்டுமாணங்களுக்கு ஜப்பான் உதவக் காத்திருக்கிறது என்றும் தெரிவித்த ரி.ரகுச்சி- நீர்ப்பாசனம், நீர்விநியோகம், விவசாயம், கல்வி, சுகாதாரம், மீன்பிடி ஆகிய துறைகளில் முன்னுரிமையுடன் பங்களிப்பதே தமது எண்ணம் எனத் தெரிவித்தார். மேலும் எத்துறைகளுக்கு உதவமுடியுமென்று தாம் இவ் விஜயத்தின் மூலம் இனங்காணவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி விடயங்களில் எமது கவனத்தை குவியப்படுத்தி வருகிறோம். கண்ணிவெடி அகற்றும் திட்டங்களையும் நாங்கள் அவதானித்துச் சேவை யாற்றுவோம் என்றும் ஜப்பானிய அரச தூதுக்குழுவின் தலைவர் கூறினார்.

நேற்றுக்காலை தரைவழியாக வன்னிக்கு வந்த ஜப்பானிய அரச தூதுக்குழு முற்பகல் பதினொரு மணியளவில் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பணிமனைக்கு வந்து சேர்ந்தது. பேச்சுக்கள் பன்னிரண்டு மணிவரை ஏறத்தாழ ஒருமணிநேரமாக நடைபெற்றது.

ஜப்பானிய அரச தூதுக்குழுவில் அதன் தலைவருடன் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த செல்வி என்.ரனாகா, ஜப்பானியத் தூதரகத்தின் முதலாவது செயலர் செல்வி கலாநிதி என்.இசக்கி, ஐ.நா.அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த செல்வி பற்றிமா செறிவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் சோ.தங்கன், புலித்தேவன், ஜோர்ஜ், அறிக்கைத் தயாரிப்பாளர் தொல்காப்பியன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த)

## தாய்லாந்து...

கும் அரசாங்கத்துக்கும்இடையில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகளை இச்சந்திப்பின் மூலம் அகற்ற முனையலாம் எனக் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வவுனியா...

முன் அமைதிப்போராட்டம் செய்து அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக மகஜர் கையளிப்பர் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மனிதஉரிமை ஆணைக்குழு காரியாலயம் முன் இன்று யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரும் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சி ஆதரவாளர்களும் அடையாள எதிர்ப்பை மேற்கொள்ளவுள்ளனர். இப்போராட்டத்திற்கு தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போருக்கு ஆதரவு தெரிவித்து யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்கள் இன்று காலை 11 மணி முதல் வகுப்புகளைப் பகிஷ்கரிக்கவுள்ளனர்.

யாழ். மற்றும் தென்மராட்சி வணிகர் கழகங்கள் விடுத்துள்ள அறிக்கைகளில் கைதிகளின் அகிம்சைப் போராட்டத்தை அரசு உதாசீனம் செய்வதை கண்டிப்பதாகவும்,

அகிம்சைப் போராட்டங்களில் ஈடுபட நிர்வாக சபைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56,61)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணயமாற்று விகிதங்களின் விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை(ரூ.ச.) | விற்பனை விலை(ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.00 | 96.44 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.81 | 151.54 |
| 1 யூரோ | 94.04 | 95.12 |
| 1 சுவிஸ் பிராங் | 64.25 | 65.23 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 51.39 | 53:34 |
| 1 ஜப்பானிய யென் | 0:76 | 0:77 |
| 1 சவுதி றியால் | 25.67 | 25.67 |

இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.